The *Guru* giving *upadeśa* of the *Tāraka Mantra* of the One who enables crossing of the ocean of births! The Ocean of Song in which manifests the One contemplated by Śiva! The One who composed divine *kṛti*s as offering to the One who treats the disease of worldly existence! *Gurudeva*! Thy Feet are my Refuge! 18

The One who worshipped the Delighter of Lakṣmī with *svara, rāga* and *laya*! The One who delighted in the excellent drink of nectar essence of melody! The One whose was the happiness of singing sweetly the sweet Name of the Supreme Rāma! *Gurudeva*! Thy Feet are my Refuge! 19

The One with a high sweet voice/who is the lofty Himālaya – in singing *Raghu Puṅgava*! The One who is the celestial Gaṅgā in the sweet *Nāda* of singing Raghunātha! The excellent King in singing sweetly the praise of the king of the Raghus! *Gurudeva*! Thy Feet are my Refuge! 20

The One who is the Gaṅgā with life-force, enlivening my life! The *Guru*, pacifying this one plunging in the excellent, virtuous *kṛti*s! The Cloud raining *kīrtana*s fused with excellent melody and rhythm! *Gurudeva*! Thy Feet are my Refuge! 21

The Torrent of the dance of beauty and richness of meaning of excellent expressions, united with elegant music and devotion! The Divine Songster, adorer of Raghunātha! *Gurudeva*! Thy Feet are my Refuge! 22

O my Refuge! The One whose cascade of sweet song is the resounding Gaṅgā, the confluence of the fruit of effort of Bhagīratha, flowing through the chosen matted locks of Śiva – Bhāgīrathī and the Alakānandā – flowing from the auspicious Feet of Viṣṇu the choicest of flowing expressions, sweet music and the delight of the auspicious Name Divine! 23

The One by whose sacred sweet expressions Hari was bathed! The *Guru*, bathed by these expressions of this one absolutely devoid of any talent in expression! The One adored with *gurubhakti*, with no other (external) help! *Gurudeva*! Thy Feet are my Refuge! 24

The One leading this one, having no other recourse, seeking refuge at Thy Feet! The One bringing (this one) to unison with the secrets of

svara and *rāga*! The One granting the boon of excellent expressions and sweet *Nāda* to this one totally devoid of any endowment of expression or singing! *Gurudeva*! Thy Feet are my Refuge! 25

The One whose virtuous *kṛti*s that entered into the heart are a cascade of the true Essence! The most venerable *sāttvic Guru*, entered into this heart! The One always meditated in the lotus of the heart! *Gurudeva*! Thy Feet are my Refuge! 26

The One who adored the Form of Śrī Rāma in the temple of the heart! The One adored as the Deity in this heart's temple! The River of song gushing in the mountain of this mind! *Gurudeva*! Thy Feet are my Refuge! 27

The One dwelling in the temple of this heart! The Ever-Blissful! The Nectar of these flowers of adulations rendering this heart's temple fragrant! The One whose Feet are adorned with these flowers of worship in this heart's temple! *Gurudeva*! Thy Feet are my Refuge! 28

The One who grants the boon of happiness, tranquillity, auspiciousness and eternity! The Most Excellent in/The One granting the boon of sweet-singing of the Name that enables one cross the ocean of worldly existence! The One who blesses with long life, freedom from disease and divine vision! The auspicious, virtuous Feet of the *Guru* are my Refuge! 29

The auspicious, greatest *Guru*, bestowing all auspiciousness! The One whose sacred feet are to be worshipped, Granter of the highest Bliss and Auspiciousness! The *Gāna Guru*, Causer of everlasting auspiciousness! I seek refuge in Thy auspicious, sacred Feet! 30

Om̃

Oṁ

Śrī Rāmajayam

Śrī Tyāgabrahma Gurvaṣṭakam

Guru, the Ocean of song united with devotion to Śrī Rāma; *Guru*, the Ocean of (singing of) Names Divine united with renunciation; *Guru*, whose effulgence has won over myriads of suns; *Guru* alone is my Refuge, the Abode of *Tattva*. 1

Guru, the instantaneous Poet, adored by *gadyam*s and charming poetry; *Guru*, whose sweet singing of the Name Divine is the divine Gaṅgā; *Guru*, whose virtuous *kṛti*s and *kīrtana*s have ever-fresh beauty; *Guru* alone is my Refuge, the Abode of *Sattva*. 2

Guru, whose speech and auspicious *kīrtana*s consist of sweet words; *Guru*, of sweet voice; the One doing *japa* of the Name Divine that had entered into His heart; *Guru*, by whom the Lord was adored in truth; the One abiding in devotion; *Guru* alone is my Refuge, the Abode of Truth. 3

Guru, delighting in singing the One dear to the Lord of *Pañcanada* / *Guru*, delighting in singing His dear One, in *Pañcanada*; *Guru*, the Granter of all that is desired and in whose virtuous mind abides Rāma / *Guru*, in whose virtuous mind abides Rāma, the Granter of all that is desired; *Guru*, the Aesthetic One, marked by swiftness and ease of poetry; *Guru* alone is my Refuge, the Abode of eternity. 4

Guru, by whose songs is sculpted beautifully Rāma, the Hari; *Guru*, in the temple of whose *kīrtana*s Viṣṇu is worshipped; *Guru*, in the temple of whose *Nāda* and *laya* Viṣṇu is resplendent; *Guru* alone is my Refuge, the Abode of *Nāda*. 5

Guru, the Himālaya of sweet *Nāda* far from the ignorant; *Guru*, the Giver of virtuous *kṛti*s teaching the ignorant; *Guru*, singing sweetly the Name that purifies the mind; *Guru* alone is my Refuge, the Abode of Wisdom. 6

Guru, whose sacred songs offer the happiness of the heavenly river, Gaṅgā; *Guru*, whose sacred singing offers the comfort of the heavens; *Guru*, warding off rebirth and leading to eternal Bliss; *Guru* alone is my refuge, the Abode of Śrī Rāma. 7

Guru, in whose melody/love shines the auspicious, choicest King, Śrī Rāma; *Guru*, the Excellent in singing, worshipping Śrī Rāma well; *Guru*, with these flowers offered with devotion at His Feet; *Guru* alone is my Refuge, the Abode of Auspiciousness. 8

Om̃

Oṁ

Śrī Rāmajayam

Sadguru Śrī Tyāgabrahma Maṅgalāṣṭakam

Auspiciousness unto the One who is the Life and Source of *saṅgīta*; the One dwelling in the *saptasvara*s; the One abiding in the *śruti*, the basic being *ṣaḍja*; the *Sadguru*. 1

Auspiciousness unto the One who sang Śiva; the One who sang the glory of Śrī Rāma, the Destroyer of enemies; the greatest Sage; the One of auspicious songs; the One whose wealth of songs is inherited by posterity. 2

Auspiciousness unto the One whose singing is the torrent of the Gaṅgā; the One speaking in a deep majestic voice/majestic musical voice; the *Gāndharva*; the One who delights in singing; the Inscrutable. 3

Auspiciousness unto *Gurunātha*; the One who is/who gives auspiciousness, delight and glory; the One whose auspicious voice is nectar / the Essence of auspicious *svara*s; the One who is Himself auspiciousness. 4

Auspiciousness unto the One to be sung/who sang in a very sweet voice (as the *koel*); the Full Ocean of music; the One dancing in the colours of the ocean / the One who is the dance of melody in the ocean; the Supreme Aim / the Granter of the Supreme Aim. 5

Auspiciousness unto the One who confers wealth; the One worshipped by the fortunate; the One who gives skilfulness and courage; the One meditated upon; the One to be attained by meditation; the Form that is meditated upon. 6

Auspiciousness unto the Sweetness of the note '*niṣāda*'; the One thought about day and night; the Granter of the fruit of Beatitude; the One who is/who gives eternal Bliss. 7

Auspiciousness unto the Presiding Deity of the *saptasvara*s; the One abiding in the *kṛti*s sung by Him; *Sadguru* Tyāgarāja; worshipped by Pushpa/with flowers. 8

Om̃

ஸ்ரீமத்ராமாயணஸார ஸ்ரீராமஸ்தோத்ரம்

ஸ்ரீராமப்ரேமையே வடிவானவருக்கு, ராமாயணத்தை இனிய பாட்டுக்களில் இசைத்தவருக்கு, த்யாகப்ரம்ம குருஸ்வாமிக்கு, அவர்தன் நற்றிருவடிகட்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம். 1

ஸ்ரீத்யாகப்ரம்மத்தால் பாடப்பட்டவருக்கு, ஸ்ரீஸீதாராமமூர்த்தியான, லக்ஷ்மியின் உள்ளக்கடலுக்கு நிலவானவருக்கு, ஸ்ரீராகவனுன உமக்கு நமஸ்காரம். 2

நிர்குணப்ரம்ம வடிவானவருக்கு, மனிதரில் உயர்ந்தவனுய் அவதரித்தவருக்கு, நற்குணங்கட்கிருப்பிடமானவருக்கு, புகழப்படவேண்டியவருக்கு ரகுஶ்ரேஷ்டனுகிய உமக்கு நமஸ்காரம். 3

ஸீதையை, ஸ்ரீராமபத்னியை, ஸ்ரீமஹாலக்ஷ்மியை, ஜனகரின் புதல்வியை, கங்கையேயான நற்றூய்மை கொண்டவளை, ஸ்ரீ எனும் அன்னையை நமஸ்கரிக்கிறேன். 4

கருணைக்கண்ணேக்குடையவளை, தூயநல்மெய்ப்பொருளானவளை, மிக இனிய மொழியுடையவளை, இன்னிசைக்குரலுடையவளை, ஸீதையை, ஸ்ரீ எனும் அன்னையை நமஸ்கரிக்கிறேன். 5

உருக்கிய பொன்னின் ஒளிபடைத்தவளை, லக்ஷ்மியை, ஸூர்யனின் ஒளிபொருந்திய தவச்செல்வியை, மூவகை துன்பங்களாம் (தன்வினை, சூழ்வினை, ஊழ்வினை) நெருப்பினைத் தணிப்பவளை, லக்ஷ்மியை, ஸ்ரீ எனும் அன்னையை நமஸ்கரிக்கிறேன். 6

நிலவை வென்ற ஒளியுடையவளை, பூமியின் புதல்வியை, பொறுமையின் வடிவானவளை, த்யாகராஜரால் வணங்கித் துதிக்கப்பட்டவளை, மேன்மையானவளை, ராமனின் நற்றுணைவியை, மிகச்சிறந்தவளை வணங்குகிறேன். 7

எல்லா மங்களங்களும் பொருந்தியவளை, எல்லா நற்குணங்கட்கும் புகலிடமானவளை, எல்லா மங்களங்களையும் அளித்துக் காப்பவளை, ஸ்ரீ எனும் அன்னையை நமஸ்கரிக்கிறேன். 8

ராமன்; ப்ரம்மனே வந்து பிறந்தவன்; பிறவிக்கடலைக் கடக்கும் தோணியானவன்; பிறவித்துன்பத்தை நீக்குபவன்; மெய்ப்பொருட் ஸாரமான தாரகநாமத்தையுடையவன்; ராமன் என்னை எப்போதும் காப்பானாக! 9

ஸ்ரீமன் நாரயணன்; விஷ்ணு; இப்பூமியில் வந்தவதரித்த மாறுதலற்ற பரம்பொருள்; ராமாயண மஹாகாவ்யநாதனும் ஸ்ரீராமசந்த்ரனான மஹாவிஷ்ணு. 10

அகில உலகிற்கும் அடிப்படைத் தோற்றுவாயானவன்; சொல்லுக்கும் எண்ணத்துக்கும் எட்டாதவன்; அகில உலகிற்கும் ஒரே தலைவனானவன்; அரக்கர் கூட்டங்களாகிய மேகங்களுக்குக் காற்றானவன். 11

அடைதற்கரியவன்; நெருங்கியவர் எளிதில் அடையக்கூடியவன்; துன்பங்களாகிய யானைகட்கு அரியான ஹரி; பாபத்திரள்களைத் தொலைவுபெறச் செய்பவன்; கரைகாணாக் கருணைக்கடலானவன். 12

மனிதனாய் அவதரித்த, தோன்றலில்லாப் பரம்பொருள்; பறவைகளாலும் (ஜடாயு) குரங்குகளாலும் (ஹனுமான், ஸுக்ரீவன்...) அடையப்பட்டவன்; நெடுங்காலமாய்ப் பூமியைப் பரிபாலித்தவன்; பெரியோர்களாலும் முனிவர்களாலும் வணங்கப்பட்டவன். 13

பிறப்பு, இறப்பு, மூப்பு இவை இல்லாதவன் / இல்லாமல் செய்பவன்; உலகை விளையாட்டுத் தோட்டமாகக் கொண்ட / உலகை இன்புறச்செய்யும் ராமனாகிய பரப்ரம்மன்; உலகை உய்விக்கும் இணையற்றவன்; வெற்றித்திருவுடை ராமன்; வெற்றி பெறச் செய்பவன். 14

தேவர்கட்கும் எல்லா உலகங்கட்கும் அரசனானவன் / எல்லா உலகங்கட்கும் உயர்ந்த தெய்வமானவன்; தேவர்கள் முதலியோரால் தேடப்பட்ட அழிவற்ற முழுமுதற்கடவுளாம் விஷ்ணுவானவன்; தேவர்கட்கெல்லாம்

கடவுளானவன்; நிலமகளாம் ஸீதையின் பதியானவன்; எளியோரைக் காப்பவன். 15

லீலையினுல் அவதாரம்கொண்ட, பூஜிக்கப்பட வேண்டியவன்; லீலையிற் கைதேர்ந்து உலகை மயக்குபவன்; உலகைக் காப்பவன்; மூவுலகுக்கும் நெருங்கியவன்; மூவுலகங்களிலும் துதிக்கப்பட்ட உத்தமன். 16

அறிவு மயக்கத் திரையைக் கிழிப்பவன்; நல்லிதயம் கொண்டோர் (தன்னில்) மயங்கச் செய்பவன்; வியனுண்டுபண்ணுபவன்; (பிறவித்தளையினின்று) விடுவிப்பவன்; மயக்கும் எழிலுருவம் படைத்த ராமன்; முனிவர்களாலும் அரசர்களாலும் நன்கு பூஜிக்கப்பட்டவன். 17

நற்குணங்கள் நிறைந்தவன்; குணங்கட்கப்பாற்பட்டவன்; விஷத்தைக் கக்கும் பாம்பை உண்ணும் கருடனை வாகனமாகக் கொண்டவன்; விருப்பு நீங்கிய நல்லுள்ளங்களின் விருப்பானவன்; அறிவு மயக்கமற்றவன், மிக்க மயங்கி விரும்பப்பட்டவன் / அறிவுமயக்கமற்றவர்களால் மிக மயங்கி விரும்பபட்டவன். 18

விளையாட்டாய்ப் பத்து அவதாரங்கள் புரிந்தவன்; பத்துத்தலை ராவணனுக்குப் பகைவனும் ராமனுகிய விஷ்ணு; தாஶரதி; மிகவும் எளியவன்; அடியார் உள்ளத்தை மகிழ்விப்பவன்/உள்ளத்தில் மகிழ்பவன். 19

பரிபூர்ணுவதாரமானவன்; நிறைவேறிய எண்ணங்களுடையவன் / உள்ள விருப்பினை – எண்ணங்களை – நிறைவேற்றுபவன்; மெய் அடியார்களைக் காப்பவன்; பார்வதியை மகிழ்விக்கும் ஶிவனுக்குகந்தவன். 20

தக்ஷனுக்குப் பாடம் கற்பித்த ஶிவனுல் துதிக்கப்பட்டவன்; தன்னடக்கம் மிக்கோரைக் காப்பதே நல்விரதமாகக் கொண்டவன்; அடியார்களின் துன்பத்தைத் தணிக்கும் ஆப்தன்; தானவர்களையும் அஸுரர்களையும் அழிப்பவன். 21

கங்கையைத் தோற்றுவித்தவன்; ஆழங்கண்டறிய முடியாதவன்; பதரீ எனும் புண்யஸ்தலத்துள்ள தூயவன்; வியன்தகு இயற்கை

எழிலே வடிவானவன்; தீக்ஷை அளிக்கும் குருவானவன்; உளமெனும் புண்யத்தலத்துள்ளவன். 22

பாகிரதியும் அலகாநந்தாவும் கூடுமிடத்தில் கோயில் கொண்டவன்; ரகுநாதன்; ஸீதையுடன் கூடியவன்; கங்கையை எதிர்நோக்கிக் கோயில் கொண்டவன். 23

தேவப்ரயாகையின் தெய்வம்; இப்புண்யஸ்தலத்தில் நன்கு பாடப்பட்டவன்; பழைய கோயிலில் நன்குள்ளவன்; பழமையானவன்; புருஷோத்தமன். 24

ஸாதுக்களின் உள்ளத்தில் ஸஞ்சரிப்பவன்; ஸாதுக்களாலும் நல்லோர்களாலும் நன்கு துதிக்கப்பட்டவன்; ஸாகேதபுரி எனும் அயோத்தியில் மங்கலமாய்த் தோன்றியவன்; ஸாமம் முதலிய வேதங்களால் ஆஶ்ரயிக்கப்பட்டவன். 25

இவ்வுலகில் மகிழனுபவமும் முயற்சியின் நிறைவும் வீட்டுப்பேறும் விளையாட்டாய் அளிப்பவன்; உள்ளே ஒளிந்துள்ள இன்பமாம் மங்கலத் திருநாமம் கொண்டவன்; பிறவிப்பெருங்கடலைக் கடக்க வழியானவன்; தாரகமந்த்ரத்துக்குள் மறைந்துள்ள விஷ்ணுவானவன். 26

தாரகநாமத்தினன்; மெய்ப்பொருட்ஸாரமானவன்; காக்கும் வடிவினன்; நற்குணங்கள் நிறைந்தவன்; பெயரிலும் வடிவிலும் மேம்பட்டவன்; மாந்தரை உய்விக்கும் பொருட்டு இவ்வுலகில் பயணித்தவன். 27

பிறப்பு இறப்பினைக் கடக்கச்செய்யும் நற்கதை கொண்டவன்; எதிரொலிக்கும் தாரகநாமம் கொண்டவன்; பிறவிப் பெருங்கடலைக் கடந்திடச் செய்யும் எழில்திரு வடிவம் கொண்டவன்; காத்து இன்பமளித்திடும் ராமன்; பரப்ரம்மமே ஆனவன. 28

காத்திடும் இன்ப நல்லமுதப் பெயருடையவன்; இனிது பாடப்பட்டவன்; நக்ஷத்திரங்கட்கதிபதியான நிலவு முகம் கொண்டவன்; நக்ஷத்திரங்கள் மின்னுவது போன்ற சிரிப்புடையவன். 29

ஸூர்யகுலத்தின் திலகமானவன்; பிறப்பற்றவன்; ஸ்ரீ தஶரதரின் புதல்வன்; கௌஸல்யாவின் திவ்ய மைந்தன்; ஸர்வ லக்ஷணங்களும் பொருந்தப் பெற்றவன். 30

தம்பி ஸௌமித்ரிக்கு மிகவும் ப்ரியனானவன்; ஶத்ருக்ன, பரதருக்கு முற்பிறந்தவன்; எல்லா உலகங்கட்கும் மிக வேண்டியவன்; முழுமதியொத்த மங்கலமுகம் கொண்டவன். 31

குற்றமற்ற திருமுகமும் நோக்கும் கொண்டவன்; தாமரைக்கண்ணினன்; அமுதப்பேச்சுடையவன்; விலைமதிப்பற்ற அணிகலன்கள் பூண்ட திருமார்பினன்; தேவர்களால் அர்ச்சிக்கப்பட்ட திருவடிகளுடைய ஸ்ரீமகாவிஷ்ணு. 32

அருணோதயத்தை நிகர்த்த எழிலொளியினன்; இளஞ்சூரியனை நிகர்த்த, நற்றிருவடிகள் கொண்டவன்; நீர்தரும் மேகத்தை நிகர்த்த கருநிற மேனியொளி கொண்டவன்; கருணாரஸம் நிரம்பியவன். 33

புன்னகை பூத்த தாமரைத் திருமுகத்தினன்; மல்லிகை மொட்டுகள் போன்ற பல் வரிசையுடையவன்; பிம்பப்பழம் போன்ற உதடுகளுடையவன்; எழில் முகம் கொண்டவன்; மிக்க எழிலுடை ராமனெனும் விஷ்ணு. 34

முழந்தாள்வரை நீண்ட திருக்கரங்களுடையவன்; ஒளிபொருந்தியவன்; தாமரைக்கண்ணோக்கினால் (நிலவுக்கதிர்போல்) குளிர்விப்பவன்; மலைகளிற்சிறந்த இமயத்தின் கம்பீரமுடையவன்; ப்ரம்மா, ருத்ரன் முதலியோரால் நன்கு துதிக்கப்பட்டவன். 35

கோதண்டமெனும் வில்லும் அம்பறாத்தூணியும் தரித்தவன் (தரிக்கப்பட்ட அம்பறாத்தூணியும் கோதண்டம் என்ற வில்லும் கொண்டவன்); தாமஸ, ராஜஸ குணங்கள் நீங்கியவன்; கோடிக்கணக்கான நிலவுகளின் ஒளி கொண்டவன்; வாக்குக்கதிபதியான ப்ரம்மாவால் துதிக்கப்பட்ட அரசனான ஸ்ரீமஹாவிஷ்ணுவானவன். 36

கோதண்டபாணி என்று புகழ்பெற்றவன்; காசியின் ஈஶனான பரமஶிவனால் துதிக்கப்பட்ட தாரகநாமம் கொண்டவன்; சுருண்ட முன்னுச்சி மயிர்

எழில் கொண்டவன்; கவிகளுள் சூர்யனுன வால்மீகியின் இதயத்தில் / ஸ்ரீத்யாகப்ரம்மத்தின் இதயத்தில் கோயில் கொண்டவன். 37

கண்ணுடிபோன்ற கன்னங்களுடையவன்; லக்ஷ்மிக்கு ஆப்தன்; உமாவுக்கும் உமாவின் ஆப்தனுன பரமஶிவனுக்கும் உகந்த இன்பத் திருநாமமுடையவன்; தீய உள்ளங்கொண்டவரை அச்சுறுத்துபவன்; பல வண்ண மலர்களால் அணிசெய்யப்பட்டவன். 38

கோடிஸூர்யப்ரகாசம் கொண்டவன்; யானையின் கம்பீர நடை கொண்டவன்; வியன்தருபவன்; ஆழ்ந்த இனிய குரலுடையவன்; நீருண்ட மேகத்தினை வெல்லும் இன்குரலுடையவன். 39

தர்மாத்மா; நலந்தருபவன்; உறுதியுள்ளவன்; தர்மத்தைக் காப்பதே நல் வ்ரதமாகக் கொண்டவன்; தர்மார்த்தக்காமமோக்ஷமாகிய நான்கு புருஷார்த்தங்களைத் தருபவன்; மழைமேகத்தின் ஒளிபொருந்திய வடிவினன். 40

திவ்யன்; தாஶரதி; தன்னடக்கம் மிக்கவன்; ஸூர்யவம்ஶமாகிய கடலுக்குச் சந்திரன் போன்றவன்; திவ்யமான அழகும் வீரமும் பொருந்தியவன்; எளியோருக்குறவினன்; பூமிக்கதிபதி. 41

ஸாகேதபுரியின் இளவரசன்; எல்ல உயர்குணங்கட்கும் இருப்பிடமானவன்; ஸத்யத்தை விரும்புபவன்; நல்லொழுக்கமுடையவன்; ஸத்துவமும் காருண்யமும் நிறைந்தவன்; மங்கலச்சிறப்புடையவன். 42

முனிவர்கள் த்யானிக்கும் மெய்ப்பொருளானவன்; முனிவர்கள் உள்ளத்தில் பூஜிக்கப்பட்டவன்; முனிவர்களால் வணங்கப்பட்ட ராமன்; முனிவர்கள் வாழ்வின் உயிர்நாடியானவன். 43

ராமன்; கௌஶிகனின் நண்பன்; முனிவரின் யாகத்தை நன்கு காத்தவன்; இளஞ்சூரியனைப்போல் பொலிபவன்; முனிவர் பூஜித்த நற்றிருவடிகளுடையவன். 44

தனது திருவடி ஸ்பர்ஶத்தால் அஹல்யையின் சாபத்தை நீக்கியவன்; பாபத்தினின்று விடுவிப்பவன்; தனது திருவடிகளை நினைப்பவரைக்

காப்பவன்; பாபமாகிய இருட்டுத் திரையைக் கிழித்திடும் பகலவனுனவன். 45

ஶங்கரனின் வில்லினே வென்றவன்; ஶ்ரீஜானகியின் உள்ளத்தைக் கொள்ளேகொண்டவன்; ஸீதையின் இதயத்தாமரைக்கு ஸூர்யனுனவன்; ஸீதாராமன்; ரகூத்தமன். 46

காக்கும் திறமிக்க நல்பாணங்கள் கொண்டவன்; ஜமதக்னியின் புதல்வனின் கர்வத்தை அடக்கியவன்; பரசுராமனே வென்றவன்; தனது ஆப்தர்களின் உள்ளத்தை வென்றவன்; எல்லோருக்கும் இன்பம் பயப்பவன்; மேலான இன்பம் நல்குபவன். 47

வீரன்; ஜனகரின் மருகன்; ஜானகியின் உயிர் நாயகன்; மேலான இன்பத்தின் மங்கல வேரானவன்; மைதிலியின் உள்ளத்தில் ரமிப்பவன். 48

கல்யாணஸுந்தர வடிவம் கொண்டவன்; மயக்கும் மங்கல எழிலுடை அரசன்; ஸீதையை மயக்கிடும் ராமன்; கல்யாணக் கோலத்தில் மெய்யொளியானவன். 49

தாய் தந்தையருக்கு மிக்க மகிழ்வளிப்பவன்; அயோத்தி மக்களே மகிழ்விப்பவன்; கருமேகத்தூடே ஶரத்சந்திரன் போன்ற, ஸீதாலக்ஷ்மியுடன் கூடிய விஷ்ணு (வாகிய ராமன்). 50

ஒரே சொல்லுடையவன்; ஒரே பத்னியுடையவன்; ஒரே பாணங்கொண்டவன்; தனித்த வீரம் கொண்டவன்; ஒன்றின்மேல் (ஒரே பரம்பொருள்மேல்) கொண்ட விருப்பைத் தணிக்கும் ஒன்றே ஆனவன்; உருவம் தாங்கிவந்த ஒரே பரம்பொருள். 51

ஆத்மாராமன் (ஆத்மாவில் ரமிப்பவன்); தன்னே வென்றவன்; காமத்தை வென்றவன்; இந்திரியங்களே வென்றவன்; உள்ளத்தில்/இவ்வெண்ணங்களில் விளேயாடும் ராமன்; இனியவன்; இனிய பாட்டில் மகிழ்பவன். 52

மென்மையாய் மொழிபவன்; இசையில் மகிழ்பவன் / இசையின் மகிழ்வானவன்; இனிமை நிரம்பிய இன்னிசைக் குரலுடையவன்; வாக்கின்

அதிபதியான ப்ரம்மனுல் துதிக்கப்பட்டவன்; வாக்காகவே இருப்பவன்; இச்சொல்மாலைகளால் எழிலணி செய்யப்பட்டவன். 53

இன்னிசை ஒலியின் இனிமைகொண்ட திருப்பெயருடையவன்; கடைத்தேற்றும் பெருமை வாய்ந்த பெயருடையவன்; ராமன் எனும் இன்னொலிகொண்ட பெயருடையவன்; தர்மமும் வீரமும் பொருந்திய ராமன். 54

பட்டாபிஷேகத்தைத் துறந்தவன்; தந்தை சொல்லை நன்கு காத்தவன்; ஸீதை பின்தொடரக் காடு சென்றவன்; தம்பி லக்ஷ்மணனுல் ஸேவிக்கப்பட்டவன். 55

உள்ளக்குகையில் விளையாடுபவன்; தவ ஒளியில் இருப்பவன்; கங்கையைக் கடந்தவன்; இப்பிறவித்துயரைப் போக்குபவன்; துறவிகளால் அர்ச்சிக்கப்பட்ட மெய்யொளிக்கதிர்; நக்ஷத்திரங்களின் அரசனுன மதியின் முகப் பொலிவுடன் திகழ்பவன். 56

சிறந்த யோகிகளால் த்யானிக்கப்பட்ட பரம்பொருளே ஆனவன்; பரத்வாஜ முனிவரால் நன்கு துதிக்கப்பட்டவன்; யமுனையால் ஒன்றுசேரப்பட்ட கங்கையால் தூய்மைபெற்ற ப்ரயாகையை அடைந்த புனிதன். 57

சித்ரகூடமலைக்குப் புறப்பட்டவன்; வால்மீகி ரிஷியால் தர்ஶிக்கப்பட்டவன்; காட்டில் ஸௌமித்ரியால் கட்டப்பட்ட அழகிய குடிசையில் இனிதே வஸித்தவன். 58

ஸீதாராமன்; வனத்தில் மகிழ்ந்தவன் / வனத்தின் மகிழ்வானவன்; ஸௌமித்ரியின் ஸேவையில் மகிழ்வுற்றவன்; ஸாதுக்களின் அறிவுத்தாமரையை மலர்விக்கும் ஒளிக்கதிரவனுனவன்; ஸீதைமணுளன்; தம்பியால் அடையப்பட்டவன். 59

மந்தாகினியில் நீராடிய ஸீதையுடன் தங்கள் விளையாட்டுத்தோட்டமாகிய வனத்தை அடைந்தவன்; மிக்க எழிலுடை வனத்தில் இன்புற்றவன் / வனத்தின் இன்பமாகியவன்; ஸீதையுடனும் தம்பியுடனும் கூடிய ஸ்ரீமஹாவிஷ்ணு. 60

பரதனால் தழுவிக்கொள்ளப்பட்ட, மங்களம்நிறை மகாவிஷ்ணுவான பரம்பொருளானவன்; பாதுகையால் தூய்மைப் படுத்தப்பட்ட கேகயனை உடையவன்; நந்திக்ராமத்தில் அபிஷேகிக்கப்பட்ட இருபாதுகைகளால் அயோத்தியைப் பரிபாலித்தவன். 61

சித்ரகூடத்தை விட்டகன்றவன்; அனஸூயா, அத்ரி இவர்களால் சந்திக்கப்பட்டவன்; திவ்யமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட மனைவியை உடையவன்; தவசிகளின் ஆஶிமொழிகட்கிருப்பிடமானவன். 62

தன்னால் தூய்மைப்படுத்தப்பட்ட தண்டகாரண்யத்தை அடைந்தவன்; அஸுரர்களை அழித்தவன்; நல்லோர்க்கு நன்மை செய்பவன்; தவசிகளின் துன்பங்களை ஒழித்தவன்; முனிவர்களால் நன்கு துதிக்கப்பட்டவன்; நல்லின்பம் நல்குபவன். 63

பஞ்சவடியில் இன்புற்ற இன்பமானவன்; தபஸ்வீ; கட்டுக்கோப்புடை உள்ளத்தினன்; அஸுரர் கூட்டத்தினைப் பிளந்தவன்; நல்லோர் கூட்டத்தினால் வணங்கப்பட்டவன். 64

கரதூஷணர்களை ஸம்ஹரித்தவன்; அஸுரர்களை அழித்த, மாறுதலற்ற பரம்பொருள்; வைதேஹியால் புல்லரிப்புடன் அணைத்துக் கொள்ளப்பட்டவன்; வைதேஹியின் பாக்கியமான, மங்களமான மஹாவிஷ்ணு. 65

ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் மேலான இன்பமானவன்/ மேலான இன்பம் நல்குபவன்; ரிஷிகள் கூட்டத்தால் நன்கு துதிக்கப்பட்டவன்; ரிஷபாரூடனான ஶிவனால் துதிக்கப்படுபவன்; ரிஷி வடிவிலுள்ள பெருஞ்சிறப்பு வாய்ந்தவன். 66

தாமஸமெனும் அஸுரனை அழிப்பவன் / தமோகுணம் நிறைந்த அஸுரர்களை அழித்தவன்; தவசிகள் துன்பத்திற்கு மாற்றானவன்; தவசிகள் மகிழும் லீலை புரிந்தவன்; தங்க நிறமான ஸ்ரீமஹாலக்ஷ்மியான ஸீதைக்கு மகிழ்வளிப்பவன். 67

தாமரை முகமும் கண்களும் கொண்டவன்; மிகச்சிறந்த வீரன்; மங்கலச்சுரங்கமானவன்; காட்டுமலர்களாலான மாலைகளணிந்தவன் /

காட்டையே மாலையாகக் கொண்டவன்; மிகச்சிறந்த இன்பமானவன்/ இன்பம் நல்குபவன்; பூமியின் புதல்வியான ஸீதைக்கு ப்ரியமானவன். 68

மாய உருக்கொண்ட மாரீசனைப் பிளந்தவன்; மாயைக்கப்பாற்பட்ட தன்னியல்பான உருக்கொண்டோன்; மாயையைக் கிழித்தெறிபவன்; பெருந்தோள்வலிவுடையவன்; மாயையாம் மேகத்திற்குக் காற்றானவன். 69

தனக்கு மிக இனிய ஸீதையைக் காணாது தவித்தவன்; க்ஷிதிஜாவைத் தேடுவதில் முனைந்தவன்; ஜனஸ்தானத்தையும் பஞ்சவடியையும் விட்டகன்றவன். 70

ஜடாயுவைக் கண்டவன்; ஆத்ம உறவினன்; இனிது மொழிபவன்; பூமியின் புதல்வி கவர்ந்து செல்லப்பட்ட செய்தியைக் கேட்டுச் சினங்கொண்ட மாபெரும் வீரனாகிய மஹாவிஷ்ணு. 71

ஜடாயுவுக்கு மோக்ஷமளித்து ஈமக்கடன்களைச் செய்தவன்; மன்னர் மன்னன்; வனத்தில் அலைபவன்; மக்கட்கு ஆதாரமானவன்; மூப்பற்றவன்; தாமரைக் கண்ணினன்; ஒப்பாரும் மிக்காரும் அற்றவன். 72

ஶபரி அன்புடன் உபசரித்துக் கொடுத்த பழங்களை உண்டவன்; ஶபரியின் பக்திக்குக் கொள்கலமானவன்; ஶபரியின் மோக்ஷத்திற்கு ஸாக்ஷியானவன்; எல்லாவற்றுக்கும் ஸாக்ஷியானவன்; ஸூர்ய வம்ஶத்தினன். 73

பம்பா நதிக்கரையில் ஸஞ்சரித்தவன்; பம்பா நதியைத்தாண்டி ஸஞ்சரித்தவன்; ரிஷ்யமூக மலையை நோக்கிப் புறப்பட்டவன்; ராஜரிஷி வேஷத்திலுள்ள ஒளிபொருந்திய விஷ்ணு. 74

ஹனுமானால் சந்திக்கப்பட்டவன்; துதிக்கப்பட்டவன்; இளையோனுடன் கூடியவன்; லக்ஷ்மியின் நாயகன்; ஸீதையைத்தேடுதலில் ஈடுபட்டவன்; ஹனுமனால் துதித்துப் பாடப்பட்டவன். 75

ஸுக்ரீவனை சந்தித்த (ஸுக்ரீவனால் சந்திக்கப்பட்ட) இன்குரலுடையோன்; ஸௌமித்ரியால் ஸேவிக்கப்பட்ட மூத்தவன்;

ஸூர்யன் மைந்தனுன ஸுக்ரீவனை நண்பனுகக்கொண்டவன்; ஸூர்ய வம்ஶத்தின் ஒளிவிளக்கானவன். 76

ஜானகியின் நகைகளைக்கண்டவன்; குரங்குகளால் வணங்கி அடையப்பட்டவன்; ஸால மரங்களைப் பிளத்தலை எவ்விதத்துன்பமும் இன்றிச் செய்தவன்; ஸுக்ரீவனுக்கு நம்பிக்கை உண்டுபண்ணியவன். 77

சொன்ன சொல் காத்தவன்; குரங்கு நண்பனை நாட்டை அடையச் செய்தவன்; மழைக்காலத்தில் மால்யவத் எனும் மலையில் வஸித்தவன்; ஆசை நீங்கியவன்; திமிரை அடக்குபவன். 78

தன்னுல் கொடுக்கப்பட்ட மோதிரத்தை உடைய வாயு மைந்தன் ஹனு-மானின் சிறப்புக்குக் காரணமான தாரக நாமத்தை உடையவன்; அரக்கர்களை அழிப்பதில் ஐயமில்லாதவன்; ஹனுமானைக் கடலினைத் தாண்டச் செய்தவன். 79

ஹனுமானுல் கொண்டுவரப்பட்ட ஸீதையைக் கண்ட செய்தியில் மிக மகிழ்ந்தவன்; குரங்கினுல் கொண்டுவரப்பட்ட மணமகள் ஆபரணமாகிய சூடாமணியைக் கண்டு மிகவும் புல்லரிப்பெய்தியவன். 80

காற்றின் மைந்தனைத் தழுவிக் கொண்டவன்; இனிமை நிறைந்த பேச்சுடையவன்; காட்டில் ஸஞ்சரிக்கும் குரங்குகளைப் பணியாளராகப் பெற்றவன்; மாருதியின் மேல் ஏறிக்கொண்ட வீரன். 81

கடற்கரையை அடைந்தவன்; விபீஷணனுல் கைகூப்பி வணங்கப்பட்டவன்; எல்ல உலகங்கட்கும் அடைக்கலம் அளிப்பவன்; விபீஷணனுக்கு அபயம் அளித்தவன். 82

ஸத்ய வாக்கும் ஸத்யமான செய்கையும் கொண்டவன்; விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தவன்; பகைவரையும் நண்பர்களையும் ஒரே நிலையில் பார்ப்பவன்; தன்னிடம் ஶரணமடைந்தவரைக் காப்பதே வ்ரதமாகக்கொண்டவன். 83

கடலருகே அமர்ந்த வீரன்; கடற்கரையில் தர்ப்பை பரப்பிய விரிப்பினை உடையவன்; விரைந்து செல்லும் காற்றை உண்ணும் பாம்பின்மேல் பள்ளிகொண்டோன்; கடற்கரையில் பள்ளிகொண்டவன். 84

கோபிக்க வேண்டியவற்றுக்குக் கோபிப்பவன்; கோபத்தை வென்றவன்; கடலின் கர்வத்தை அடக்கியவன்; கடலரசனால் அர்ச்சித்துத் துதிக்கப்பட்டவன்; விரும்பியவற்றை அடைபவன்/அடையச் செய்பவன்; (தன்னை) அடைந்தோரைக் காப்பவன். 85

பாலம் கட்டுவித்த, அமைதியான இயல்புடையோன்; தூய உள்ளத்துடன் ஸேவிக்கப்பட்டவன்; ஸேவிக்கப்பட வேண்டியவன்; ஸேவிப்பவரை நன்கு காப்பவன்; ஹனுமானை வாஹனமாகக்கொண்ட உத்தமன். 86

போரில் திறமிக்கவன்; அம்புமாரி பொழிபவன்; அச்சுறுத்தும் போர்த்திறனுடைய ராமன்; அரக்கர்களை அச்சுறுத்தும் நிகரற்றவன்; பகைவர்களை அழிக்கும் நல்லம்புகள் உடையவன். 87

ஸூர்ய கிரணங்கள் போன்ற அம்புகளைப் பொழிபவன்; கணக்கற்ற ஸூர்யர்களின் ஒளி பொருந்திய விஷ்ணு; ஸூர்யவம்ஶத்தில் தோன்றிய வீரன்; ஸூர்யனைத்துதித்தவன்; ஒளிபொருந்தியவன். 88

குடத்தில் தோன்றிய அகஸ்த்யரால் பாடப்பட்டவன்; முனிவர்களாலும் நல்லோர்களாலும் நன்கு துதிக்கப்பட்டவன்; கோதண்டத்தைக் கையிலேந்திய தூயோன்; அம்பெய்யும் திறமைக் கடலானவன். 89

அரக்கர்களின் அமைப்புகளை அழித்தவன்; ராவணன் எனும் அரக்கனை மாய்த்தவன்; பகைவரை அச்சுறுத்தும் அம்புகள் கொண்டவன்; அதர்மத்தை வென்றவன்; தர்மத்தைக் காப்பவன். 90

தர்மத்தை நிலைநாட்டும் பரம்பொருள்; விபீஷணனுக்கு நாட்டை அளித்தவன்; தேவதேவர்களால் அர்ச்சிக்கப்பட்டுத் துதிக்கப்பட்டவன்; மலர்ப்பொழிவினால் அபிஷேகிக்கப்பட்டவன் (புஷ்பாவின் இந்தத் துதிப் பொழிவினால் அபிஷேகிக்கப்பட்டவன்). 91

மிக்க தூய்மையுடைய ஸீதையை அடைந்தவன்; கொழுந்து விட்டெரியும் நெருப்பின் தூய்மை கொண்ட மஹாலக்ஷ்மியை உடையவன்; ஶ்ரீமன் நாராயணன்; முடிவற்றவன்; லக்ஷ்மியுடன் அவதரித்தவன். 92

இப்ரபஞ்சத்தின் நாயகனுன ராமன்; ப்ரம்மா, ஶிவன் இவர்களால் நன்கு துதிக்கப்பட்டவன்; தந்தையின் நல்லாசி மொழிகளோடு கூடியவன்; தந்தையினுல் அணைத்துக்கொள்ளப்பட்ட நல்மைந்தன். 93

புஷ்பக விமானத்தில் ஏறியவன்; ஸீதாராமன்; பகைவரை அடக்கும் வீரன்; தம்பி லக்ஷ்மணனுடன் கூடியவன்; நன்கு பூஜிக்கப்பட வேண்டியவன்; ஸுக்ரீவனுலும் ஹனுமானுலும் அடையப்பட்டவன். 94

வானரர்களை வழிநடத்தும் ஜாம்பவானை உடைய விஷ்ணுவானவன்; வானவழியில் பயணம் புறப்பட்டவன்; தெரிந்த, தெரியாத இடங்களைக்கண்ட ஸீதையின் விருப்பத்தை (வானரபத்னிகளுடன் கூடி அயோத்தி செல்ல) நிறைவேற்றியவன். 95

பரத்வாஜ முனிவரின் ஆஶ்ரமத்தை வந்தடைந்தவன்; முனிவரால் பூஜித்துத் துதிக்கப்பட்டவன்; பரதனுல் புலகிதமடைந்து தழுவிக் கொள்ளப்பட்டவன்; கௌஸல்யாவின் இன்பத்தை வளர்ப்பவன். 96

ஸாகேதபுரியெனும் கடலைப் பொங்கச்செய்யும் நிலவானவன்; ஆரவாரத்துடன் மக்களால் வணங்கப்பட்டவன்; நன்கு வரவேற்கும் மக்களின் மகிழ்வானவன்; பரதனுல் பொருத்தப்பட்ட பாதுகைகளை உடையவன். 97

நந்திக்ராமத்தை வந்தடைந்தவன்; தன்னுல் தூய்மை பெற்ற பரதனின் ஆஶ்ரமத்தை அடைந்தவன்; குருவணக்கத்தில் ஈடுபட்டவன்; குபேரனின் ஊர்தியைத் திருப்பிக் கொடுத்தவன் (திருப்பிக் கொடுக்கப்பட்ட குபேரனது ஊர்தி). 98

(களையப்பட்ட ஜடாஜூடங்கள்) ஜடாஜூடங்கள் களையப்பட்டவன்; நீராடி நறுமணப்பூச்சுகளுடன் ஒளி வீசுபவன்; பட்டாடையில் ஒளிர்பவன்; கௌஸல்யாவின் அன்பு மகனுய் வந்த விஷ்ணு. 99

ஸர்வாலங்காரபூஷிதையான மனைவியைக் கொண்டவன்; அயோத்யா நகரை நோக்கிப் புறப்பட்டவன்; ஸாகேதபுரிக்கு ஒளியூட்டும் ஸூர்யனுனவன்; அயோத்யா நகரமக்களின் அன்புடையவன். 100

ஸாகேதபுரியின் மிகச்சிறந்த அரசன்; பட்டாபிஷேக வைபவத்தை உடையவன்; இம்மிகச்சிறந்த மங்கலமான மகிழ்ச்சி ஆரவாரம் நிறைந்த நிகழ்ச்சியுடையவன். 101

ரத்னங்கள் ஒளிரும் அழகிய ஸிம்மாஸனமுடையவன்; ஸீதையுடன் கூடியவன்; தேவர்களால் ஸேவிக்கப்பட்டவன்; வஸிஷ்டர், வாமதேவர் முதலியோரால் அபிஷிக்கப்பட்ட சிறந்த ராமனாகிய விஷ்ணு. 102

எல்லாக் கடல்களின் நீராலும் அபிஷேகிக்கப்பட்டவன்; எல்லா நதிகளின் நீராலும் அபிஷேகிக்கப்பட்டவன்; எல்லா மூலிகைச்சாறுகளும் மேல் பிழியப்பட்டவன்; திவ்யமான அபிஷேகத்தில் ஒளியுடன் விளங்குபவன். 103

எல்லா உபநிஷதங்களாலும் அடையப்பட்டவன்; எல்லா வேதங்களுக்கும் உட்பொருளாகி ஸாரமாயுள்ள விஷ்ணு; எல்லாவற்றுக்கும் ஆதாரமானவன்; மேலான பரம்பொருளானவன்; எல்லா ஶாஸ்த்ரங்களுக்கும் சொல்லும் பொருளுமாயுள்ள மஹாவிஷ்ணு. 104

எல்லா மங்களங்களும் பொருந்தியவன்; எல்லா உயிர்கட்கும் உயிரூட்டுபவன்; எல்லா நற்குணங்கட்கும் அடைக்கலமானவன்; எல்லோர் விழிகட்கும் விருந்தான பேரொளி. 105

அழகிய முத்துக்களும் ரத்னங்களும் இழைத்த மாலைகள் கொண்டவன்; நூறு தங்கத்தாமரைகள்கொண்ட மாலை அணிந்தவன்; மழை முகிலின் ஒளிகொண்டவன்; இக்ஷ்வாகு குலத்துதித்த ஸூர்யனானவன். 106

ஶத்ருக்னனால் நன்கு குடை பிடிக்கப்பட்டவன்; ஸௌமித்ரியும் பரதனும் கைகூப்பி வணங்கப்பட்டவன்; ஸுக்ரீவனால் வெண் சாமரம் வீசப்பட்டவன்; விபீஷணனால் இன்னொரு சாமரம் வீசப்பட்டவன். 107

இசை, கூத்து மகிழ்வுடன் கொண்டாடப்பட்டவன்; ஸங்கீதப்ரியன்; இன்னிசைக் குரலுடையவன்; காகுத்ஸ்த ராஜ ஸிம்மமானவன்; காகர்ல வம்ஶத்துதித்த ஸத்குரு ஶ்ரீத்யாகப்ரம்மத்தால் துதிக்கப்பட்டவன். 108

பட்டாடையில் ஒளிர்பவன்; பளபளக்கும் மகுடகுண்டலங்களுடையவன்; ஸூர்ய வம்ஶத்தின் பேரரசனுனவன்; உலகை மகிழ்விப்பவன்; நல் வ்ரதங்கள் கொண்டவன். 109

எழிலுறும் மங்களமான ராமன்; லக்ஷ்மியை மகிழ்விப்பவன்; பூமிக்கரசன்; உலகைக் காப்பதில் ஈடுபட்டவன்; உலகைக் காப்பவன்; நன்கு பூஜிக்கப்பட்டவன். 110

தமால மரத்தின் அடர் நீல வண்ண எழிலொளிர்பவன்; அடர்முகிலின் ஆழ்ந்த ஒலி கொண்டவன்; கருணைக் கடைக்கண்ணுேக்குடையவன்; முகிலொளி கொண்டவன்; அடர்ந்த பாபத்திரள்களாம் முகில்கட்குக் காற்றுனவன். 111

பட்டாபிராமசந்த்ரன்; பேரின்பக்கடலானவன்; மேலான வியன்தரு சரித்ரம் கொண்டவன்; தாமரைக்கண்ணினுள் லக்ஷ்மியுடன் கூடிய மஹாவிஷ்ணு. 112

குரங்குகளில் சிறந்த ஹனுமானுல் துதிக்கப்பட்டவன்; திருவுடையவன்; விரும்பின செல்வத்தை அளிப்பவன்; மன்மதனின் பகைவனுன ஶிவனுல் துதிக்கப்பட்ட மிகச்சிறந்தவன்; காமம் முதலான பகைகளைப் பிளப்பவன். 113

நூற்றுக்கணக்கான ராகங்களில் துதித்துப் பாடப்பட்டவன்; நூறு கோடி ஸூர்யர்களின் ஒளி பொருந்தியவன்; இந்நூற்றுக்கணக்கான ஶ்லோகங்களின் சொல்லும் பொருளும் ஆனவன்; நூறு கோடி முறை நமஸ்கரிக்கப்பட்டவன். 114

ஶ்ரீத்யாகப்ரம்மத்தால் நன்கு தர்ஶிக்கப்பட்ட பட்டாபிராமனுன, பூஜிக்கப்பட வேண்டிய விஷ்ணு; அழகிய மங்கலமான ஸிம்மாஸனத்தை அணி செய்பவன்; திருவுருவாகிய ஜானகியின் நல்மங்கலமாகிய ஶ்ரீ மஹாவிஷ்ணு. 115

ஶ்ரீத்யாகப்ரம்மத்தின் வாக்குப்பொழிவில் நனைந்த பட்டாபிராமனுன விஷ்ணு; ஸத்குருஸ்வாமியால் இனிது பாடப்பட்ட, உலகை மயக்கும் ராமனுன விஷ்ணு. 116

ஶ்ரீத்யாகப்ரம்மத்தால் துதித்துப்பாடப்பட்ட புண்ய சரிதச் சிறப்புடையவன்; ஸீதாராமனெனும் தெய்வம்; எல்லா மங்களங்களும் அருள்பவன். 117

ஶ்ரீத்யாகப்ரம்மத்தின் இதயத்தில் வஸிப்பவன்; அவருக்கு நேரில் காட்சி அளித்த, அமுத மொழியுடையவன்; குருஸ்வாமியின் இனிய ஸங்கீதத்தில் முழுமையாய் இருக்கும் பழமையானவன். 118

ஶ்ரீத்யாகப்ரம்மத்தின் நற்றுதிகளான திவ்ய நாம கீர்த்தனங்களாய் இருப்பவன்; குருவினுல் நித்யோத்ஸவத்தில் கொண்டாடப்பட்டு நன்கு பாடப்பட்டவன்; குரு நேரில் கண்ட ஈஶ்வரனுனவன். 119

குருவின் ஸங்கீதத்தில் ஸான்னித்யம் கொண்டவன் (இருப்பவன்); நாதத்தின் அமுதச்சாறே வடிவானவன்; ஸப்தஸ்வரங்களே வில்லில் ஒலிக்கும் மணிகளாகக் கொண்டவன்; கோதண்டராமனெனும் - இன்னிசைக்குரலோன் / இன்னிசையாய் இருப்பவன். 120

நயம், தேஶ்யமெனும் இசையின் ஒலியே வில்லின் வெற்றிமுழக்கமாகக் கொண்டவன்; இனிய ஸங்கதிகளே தன் சொல்லின் போக்கானவன்; தாளகதியுடன் சுழலும் அம்புகள் கொண்டவன்; பஜனைசெய்து இன்புடன் ஸேவிக்கப்பட்டவன். 121

குருகீர்த்தனத்தின் ஸத்ஸாரமாய் இருப்பவன்; ராகரத்னங்களாலான அழகிய மாலை அணிந்தவன்; குருதேவரின் உள் நிலைத்த பரம்பொருளானவன்; குருதேவரிடமின்று வேறல்லாதவன்; மேலான பரம்பொருளானவன். 122

'ஓம்'காரத்திற்கிருப்பிடமானவன்; மேலான உண்மையே பெயரானவன்; 'ஓம்'காரநாத வடிவானவன்; 'ஓம்'காரமெனும் கூண்டில் மறைந்திருப்பவன்; 'ஓம்'கார ஒலியால் பூஜிக்கப்பட்டவன். 123

தன் சரிதத்தைத் தானே இந்த ஶ்லோகங்களில் பாடிக்கொண்டவன்; இம் மலர்மாலைகளால் அழகுற அணி செய்யப்பட்டவன்; வேறொரு தகுதியும் இல்லாத புஷ்பாவின் உள்ளாழ்ந்த அன்பின் இத்துதிகளால் ஸேவிக்கப்பட்டவன். 124

ஶ்ரீமத்ராமாயணக் கதையின் ஸாரம் / ஶ்ரீமத்ராமாயணமெனும் அமுதக்கதை; ஶ்ரீராமனின் கருணை நல்குவது; ராமனின் துதி; மிகவும் புண்யம் தருவது; குருவினால் உள்ளுயிர்ப்பளிக்கப்பட்டது; மங்களம் நல்குவது. 125

ராமசந்த்ரனுக்கு மங்களம்; ஸீதையென்னும் நல்மங்கல மணியை மனைவியாகப் பெற்றவனுக்கு, த்யாகப்ரம்மம் தன்னில் ஒன்றியவனுக்கு, மங்களமே அடையாளமாகக் கொண்டவனுக்கு மங்களம். 126

குருதேவருக்கு மங்களம்; இந்த ஸ்தோத்ரத்தைத் தோற்றுவித்தவருக்கு, ராமபத்ரனில் நன்கு ஒன்றியவருக்கு, த்யாகராஜருக்கு மங்களம். 127

ஓம்

மங்களம்

ஸ்ரீராமஜயம்

ஸ்ரீராம ஸஹஸ்ரநாமாக்ஷர புஷ்பாவளி

தன்னிகரற்ற ராமபக்தருக்கு; இவ்வக்ஷராவளியின் கவிதை ஆற்றலானவருக்கு; தன்னிகரற்ற குருதேவருக்கு; என்றும் உள்ளவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 1

இன்பமான நாதவடிவானவருக்கு; ஆத்மஒளியைச் சுடர்விட்டு ஒளிரச் செய்பவருக்கு; ஆதிதேவனாகிய ராமனைப் பாடியவருக்கு; ஆசார்யருக்கு - மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 2

ஸ்ரீஸீதாராமனைப் பாடியவருக்கு; இப்புஷ்பாவளியின் உள்ளுயிர்ப்பானவருக்கு; ஸ்ரீத்யாகப்ரம்மம் எனும் நற்பெயர் கொண்டவருக்கு; ஸத்குருஸ்வாமிக்கு நமஸ்காரம். 3

அன்னை ஸீதாமஹாலக்ஷ்மிக்கு; அக்ஷரத்தின் ஆரம்பத்தில் அழைக்கப்பட்டவளுக்கு; மிகுந்த மங்களம் அளித்துக் காப்பவளுக்கு; மிக்க ஒளியுடையவளுக்கு - மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 4

அக்ஷராவளியால் பூஜிக்கப்படவேண்டியவருக்கு; அழிவனவுள்ளுள்ள அழியா ஆத்மாவானவருக்கு; இவ்வக்ஷராவளியில் வஸிப்பவருக்கு / இவ்வக்ஷராவளியின் மணமானவருக்கு; ஸ்ரீராமருக்கு – மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 5

இரண்டற்ற தத்துவத்தின் ஸாரமானவருக்கு; அழிவற்றவருக்கு; பிறப்பற்றவருக்கு; உள்ளிருக்கும் ஆத்மாவானவருக்கு; நினைப்பில் அகப்படாதவருக்கு; நினைத்துப் பார்க்க வேண்டிய வடிவுடையவருக்கு; ஸீதாராமனாகிய உமக்கு நமஸ்காரங்கள். 6

அயோத்யா அரசனின் புதல்வருக்கு; பூமியின் மகளான ஸீதையை மனைவியாகப் பெற்றவருக்கு; நிகரற்ற பெருஞ்சிறப்புடையவருக்கு; மகிழ்விக்கும் ஸ்ரீராமனாகிய உமக்கு நமஸ்காரம். 7

ஆனந்தத்தின் ஆணிவேரானவருக்கு; முதலும் முடிவும் இல்லா ஒளி-யானவருக்கு; (தீய) அரக்கர்களை இல்லாமல் செய்யப் பிறந்தவருக்கு; ஆத்மாவில் திளைத்துக்களிக்கும் உமக்கு - நமஸ்காரங்கள். 8

பூமிக்கதிபருக்கு; மிகவும் விரும்பப்பட்டவருக்கு; தண்ணிலவும் பகலவனும் கண்களாகக் கொண்டவருக்கு; ஸூர்யவம்ஶமாகிய கடலுக்குச் சந்திரனானவருக்கு; இக்ஷ்வாகு குல ஸூர்யனுக்கு நமஸ்காரங்கள். 9

எங்கும் பரவிய ஸத்துவ ஒளியானவருக்கு; காற்றின் புதல்வனான ஹனுமானால் வணங்கப்பட்டவருக்கு; ஈஶன் நன்கு துதித்த நற்பெயர் கொண்டவருக்கு; ஈஶ்வரனுக்கு – மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 10

சிறந்த ஶ்லோகங்களால் பூஜிக்கப்படவேண்டியவருக்கு; மேலான இறையன்பை அருள்பவருக்கு; மிகவும் மேம்பட்ட குணங்களுடையவருக்கு; மிகவும் மேலானவருக்கு - மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 11

புலரிப்பொழுதின் அமைதியில் பாடப்பட வேண்டியவருக்கு; புலரியில் த்யானம் செய்பவரை அடைபவருக்கு; புலரியில் துதித்துப்பாடப்பட்டவருக்கு; புலரியின் இன்பமான உமக்கு நமஸ்காரங்கள். 12

முனிவர்கள் பூஜித்த திருவடிகளுடையவருக்கு; முனிவர்கள் துதித்த சிறப்புடையவருக்கு; முனிவர்கள் உள்ளத்தில் வஸிப்பவருக்கு; தூய இயல்புடைய விஷ்ணுவுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 13

ஒன்றே ஆன ப்ரம்மனே தன் இயல்பானவருக்கு; ஒரே வாக்கியத்தின் உட்பொருளானவருக்கு (அது நீயே ஆகிறாய்); விஷ்ணுவுக்கு; தனித்து உள்ளுள் உணரப்பட்டவருக்கு; ('ஓம்' என்னும்) ஒரே எழுத்தாய் உள்ளவருக்கு, உமக்கு நமஸ்காரங்கள். 14

ஒருமைப்பாட்டுடனும் பக்தியுடனும் பாடப்பட்டவருக்கு; தனிப்பட்ட இன்பமானவருக்கு / இன்பம் அருள்பவருக்கு; உள்ளுள் ஆத்மாவுடன் ஒன்றிடலான ஒரே நோக்கினை அருள்பவருக்கு, தனிப்பட்ட உமக்கு நமஸ்காரங்கள். 15

‘ஓம்’காரத்தின் வெளிப்படை வடிவானவருக்கு; ‘ஓம்’கார நாதத்தின் ஶக்தியானவருக்கு; ‘ஓம்’காரத்தின் உள்ளுள்ள ஸத்துவத்துக்கு; ‘ஓம்’கார ப்ரம்மனுக்கு நமஸ்காரங்கள். 16

ஆற்றலளிக்கும் அமுதப்பெயர் கொண்டவருக்கு; ஒளிரும் மெய்யின் ஒளி-யானவருக்கு; மருந்தெனச் சிறப்புறும் திருநாமம் கொண்ட ராமனுகிய உமக்கு நமஸ்காரங்கள். 17

கல்யாணகுணங்கள் நிறைந்தவருக்கு; மங்கலச் சிறப்பளிப்பவருக்கு; கல்யாண ராமசந்த்ரனுக்கு; மங்களமான லக்ஷ்மீநாயகனுக்கு நமஸ்காரங்கள். 18

காருண்யம் நிரம்பிய நோக்குடையவருக்கு; காமம் முதலிய பகைவரைப் பிளப்பவருக்கு; விரும்பியவற்றை அளிப்பவருக்கு; காலனுக்கப்பாற்பட்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 19

ஒளிக்கதிர்மாலை அணிந்தவருக்கு; குரங்குகள் துதித்த ஒளியே ஆனவருக்கு; கீர்த்தனை வெள்ளத்தில் அமிழ்ந்துள்ளவருக்கு; புகழப்பட்டவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 20

மல்லிகைமொட்டுகள் போன்ற பல்வரிசையுள்ளவருக்கு; சுருண்ட முன்னுச்சிமயிருடன் பொலிபவருக்கு; பாம்பணையில் பள்ளிகொண்டவருக்கு; குலதெய்வத்துக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 21

ஆமையாகவும் மீனுகவும் அவதரித்தவருக்கு; கடலில் பள்ளிகொண்டவருக்கு; கணக்கற்ற துதிகளாம் மாலைகள் அணிந்தவருக்கு; உயர் பரம்பொருளானவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 22

க்ருஷ்ணவதாரமெடுத்து லீலைகள் புரிந்தவருக்கு; இழிந்தோரைக் கை தூக்கி விடுபவருக்கு; கைகூப்பி வணங்குபவருக்கு அருள் செய்பவருக்கு; கருணை நிறைந்தவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 23

கேதாரநாதனுன் ஶிவனுல் துதிக்கப்பட்டவருக்கு; தனித்த முழுமையான ஞானமளிப்பவருக்கு; இமயத்தில் வஸிப்பவருக்கு; கேஶவனுக்கு நமஸ்காரங்கள். 24

கைகேயியின் புதல்வனுல் பூஜிக்கப்படவேண்டியவருக்கு; கைடபனின் பகைவன் என்று நற்புகழ் பெற்றவருக்கு; கைலாஸநாதரின் மகிழ்வானவருக்கு; வீட்டுப்பேறு அளிப்பவருக்கு நமஸ்காரங்கள். 25

கோடிக்கணக்கில் ஆழ்ந்து ஜபிக்கப்பட்ட திருநாமத்தையுடையவருக்கு; கோபதாபங்களை அழிப்பவருக்கு; கோடிஸூர்யர்களின் ஒளியென ப்ரகாஶிப்பவருக்கு; கோதண்டபாணிக்கு நமஸ்காரங்கள். 26

கௌஸல்யாவின் அன்புப்புதல்வனுனவருக்கு; கௌஶிகரின் யாகத்தைக் காத்தவருக்கு; மஞ்சள் பட்டு உடுத்தியவருக்கு; கௌஸ்துபமணியை அடையாளமாகக்கொண்ட உமக்கு நமஸ்காரங்கள். 27

வரிசைப்படி அக்ஷரங்களால் பாடப்பட்டவருக்கு; எல்லாம் அறிந்தவருக்கு; அருள்பாலிப்பவருக்கு; செயல் ஒருமைப்பாட்டினை உபதேஶித்தவருக்கு; விளையாட்டில் மகிழ்பவருக்கு நமஸ்காரங்கள். 28

கொடிய அரக்கர்களை மாய்த்தவருக்கு; சினம், மதிமயக்கம் இவற்றைக் கிழித்தெறிபவருக்கு; ஆஞ்ஜனேயரை மார்புறத் தழுவியவருக்கு; உள்ளத்துன்பத்தை அகற்றுபவருக்கு, உமக்கு நமஸ்காரங்கள். 29

வீணையின் இன்னெலியில் இருப்பவருக்கு; ஒவ்வொரு நொடியும் நினைக்கப்பட்டவருக்கு; தன்னைத் துதிக்கும் ஶிவனின் உள்ளத்தில் உள்ளவருக்கு; மன்னிக்கும் இயல்புள்ளவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 30

க்ஷிதிஜாவின் நாதரான சிறந்தவருக்கு; பாற்கடலில் பள்ளிகொண்டவருக்கு; கொந்தளிக்கும் உள்ளத்தை அமைதிப் படுத்துபவருக்கு; நலஞ்செய்யும் உமக்கு நமஸ்காரங்கள். 31

பரமாத்மாவுக்கு; மேலான தெய்வத்திற்கு; ஆத்ம அறிவை விரைந்தளிப்பவருக்கு / ஆத்மாவை விரைந்தறியச் செய்பவருக்கு;

பட்டுப்போன்ற மிக மென்மையான பேச்சுடையவருக்கு; நிலமகள் மகளின் நாயகருக்கு நமஸ்காரங்கள். 32

பறவைகளின் அரசனான கருடனை வாகனமாகக் கொண்டவருக்கு; கரதூஷணர்களை அழித்தவருக்கு; கல்கண்டின் இனிமை கொண்ட பேச்சுடையவருக்கு; சிறப்பளிப்பவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 33

கங்கை தோன்றும் திருவடியுடையவருக்கு; கஜேந்திரனை முக்தி பெறச்செய்தவருக்கு; கம்பீர ஒளியும் அழகும் கொண்டவருக்கு; பெருமதிப்புக்குரியவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 34

காந்தர்வ கானத்தினால் பூஜிக்கப்பட வேண்டியவருக்கு; இசை இனிமையில் இருப்பவருக்கு; பாட்டில் இன்புறுபவருக்கு; பாட்டே ஆனவருக்கு; காயத்ரீ இசையாய் இருப்பவருக்கு நமஸ்காரங்கள். 35

மலையிலுறையும் ஈசனுக்குகந்த நற்றிருநாமம் கொண்டவருக்கு; இனிய குரலில் மொழிபவருக்கு; இசைவாணர்களாலும் முனிவர்களாலும் வணங்கப்பட வேண்டியவருக்கு; கீதாசார்யனான உமக்கு நமஸ்காரங்கள். 36

கீதவாத்யங்களுடன் வணங்கப்பட்டவருக்கு / கீதவாத்யங்களில் மிக மகிழ்பவருக்கு; பாடப்பட்ட ஸத்க்ருதிகளில் மகிழ்பவருக்கு; குருதேவரால் நன்கு பாடப்பட்டவருக்கு; உள்ளக்குகையில் மகிழ்பவரான உமக்கு நமஸ்காரங்கள். 37

மறைந்துள்ளவருக்கு; நற்குணங்கள் நிறைந்துள்ளவருக்கு; குணங்கட்கப்பாற்பட்ட இயல்புடையவருக்கு; மறைவான இதயமாம் தூய இடத்தில் வணங்கப்பட வேண்டியவருக்கு; மறைந்துள்ள பரமாத்மாவுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 38

வீட்டின் தெய்வமானவருக்கு; பாடப்படுபவருக்கு; இசையரசரான த்யாகப்ரம்மத்தால் துதிக்கப்பட்டவருக்கு; தங்கமயமான மலையைச் சேர்ந்த கங்கையைத் தோற்றுவித்த திருவடியுடையவருக்கு; மாலைநேர அமைதியாய் இருப்பவருக்கு நமஸ்காரங்கள். 39

கோவிந்தனுக்கு; நல்மகிழ்வளிப்பவருக்கு; கௌரீநாயகன் மகிழ்வுறுபவருக்கு; ஒளிபொருந்திய முகம் கொண்டவருக்கு; தூய எழில் தோற்றமுள்ளவருக்கு; குருவின் க்ருதிகளாய் உள்ளவருக்கு நமஸ்காரங்கள். 40

பூமியின் புதல்வியின் உள்ள ஒளியானவருக்கு; கோக்கப்பட்ட இவ்வக்ஷரமாலை அணிந்தவருக்கு; இந்நூலின் நாதனானவருக்கு; இந்நூலாய் உள்ளவருக்கு; சோர்வை நீக்குபவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 41

முயற்சியை நிறைவாக்குபவருக்கு; கம்பீரமாய்ப் பாட அருள்புரிபவருக்கு; மணியோசையுடன்/மணியோசைபோன்ற குரலில் பூஜிக்கப் படவேண்டியவருக்கு; மேகத்தின் கருமை கொண்ட உமக்கு நமஸ்காரங்கள். 42

மணியோசையென கணீர் என்று பாடப்பட்டவருக்கு; மிக்க ஆற்றலுள்ளவருக்கு; பெருந்திரளான பாபக்கூட்டங்களை அழிப்பவருக்கு; முகில் முழக்கம் போன்ற கம்பீரக்குரலுடைய உமக்கு நமஸ்காரங்கள். 43

புகழ்ந்து முழங்கப்பட்ட வியன்தரு நற்றிருநாமமுடையவருக்கு; சுழலும் உள்ளத்தை அமைதிப்படுத்துபவருக்கு; கொடிய ஸம்ஸாரத்தைக் கடக்கச்செய்பவருக்கு; இரக்ககுணம் நிறைந்த உமக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 44

கருணைக் கடைக்கண்ணோக்கினால் நன்கு காப்பவருக்கு; ஸூர்யவம்ஶத்துத் தோன்றலான பேரொளிக்கு; வெறுப்பை அழிப்பவருக்கு, ஒளியின் இருப்பிடமானவருக்கு; கருணை உள்ளம் கொண்டவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 45

கடும் பகலவனை நிகர்த்த ஒளியுடையவருக்கு; சந்த்ரஸூர்யர்களைக் கண்களாகக் கொண்டவருக்கு; கடுங்காற்றைப்போல் பறக்கும் அம்புகள் கொண்டவருக்கு; முழுமதிமுகத்தவருக்கு, உமக்கு நமஸ்காரங்கள். 46

வில்லினுல் அணிசெய்யப்பட்ட திருக்கரங்களுடையவருக்கு; வியன்தகு சிறப்புடைய சரிதமுடையவருக்கு; பூஜிக்கத்தகுந்தவருக்கு; அமைதியுள்ளவருக்கு; அழகிய கண்கள் கொண்ட உமக்கு நமஸ்காரங்கள். 47

நெடுங்காலமாகப் பாடப்பட்டவருக்கு; இவ்வெண்ணங்களால் அர்ச்சிக்கப்பட்ட, இவ்வுள்ளத்து எண்ணமானவருக்கு; என்றுமிருக்கும் சரிதம் உடையவருக்கு; உள்விழிப்புணர்வின் வடிவானவருக்கு, உமக்கு நமஸ்காரங்கள். 48

தூய அறிவுணர்வின் வெளிப்படை வடிவானவருக்கு; எண்ணத்திற்கு அப்பாற்பட்டவருக்கு; எண்ணப்பட்டவருக்கு; எண்ணத்தைத் தூயதாக்கும் திருப்பெயர் கொண்டவருக்கு; மேலான விழிப்புணர்வானவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 49

உள்ளங்கவர் பேரொளியுடையவருக்கு; உணர்வுள்ளவை, உணர்வற்றவை எல்லாமாகவும் உள்ளவருக்கு; உள்ளத்துதித்த இவ்வெண்ணங்களால் அர்ச்சிக்கப்பட்ட கடவுளுக்கு; சைதன்யமாய் உள்ள ப்ரம்மனுக்கு நமஸ்காரங்கள். 50

சித்திரை மாதத்தில் அவதரித்த, காக்கும் விஷ்ணுவுக்கு; தனித்த பக்தியுடையவருக்கு உட்தூண்டலளிப்பவருக்கு; தூய இயல்பினருக்கு; குற்றங்குறை அற்றவருக்கு; வீழ்ந்திட்டவர்க்கு அடைக்கலமான உமக்கு நமஸ்காரங்கள். 51

வெண் கொற்றக்குடை நிழலிலுள்ள பேரரசருக்கு; செய்யுளணியுடன் செய்யப்பட்ட இத்துதிகளால் வணங்கப்பட்டவருக்கு; அணிகள் கூடிய இச்செய்யுள் துதிகளில் இருப்பவருக்கு; இனியவருக்கு, உமக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 52

ஒளிவட்டத்தால் சூழப்பட்டவருக்கு; உடைந்த உள்ளத்தை அமைதிப்படுத்துபவருக்கு; அக்ஷரங்கள் பதித்த இம்மாலை அணிந்தவருக்கு; காப்பவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 53

பிறப்பும் இறப்பும் அற்றவருக்கு; மூப்பு, உள்ள உடல் துன்பங்கள் இவற்றை அழிப்பவருக்கு; உலகங்கட்கெல்லம் நாதருக்கு; வழிகாட்டுபவருக்கு; ஜயராமனுகிய உமக்கு நமஸ்காரங்கள். 54

உலகங்கட்கெல்லாம் இன்பம் செய்பவருக்கு; ஜானகியாகிய வெற்றித்திருவை மனைவியாகக்கொண்டவருக்கு; உலகை மயக்கும் ராமனுக்கு; மக்கட்காதாரமான உமக்கு நமஸ்காரங்கள். 55

ஜபிக்கப்படவேண்டிய தாரகநாமத்தை உடையவருக்கு; ஜபமந்த்ரமே தனது வடிவாகக் கொண்டவருக்கு; ஜபத்தின் பொருள், அக்ஷர வடிவானவருக்கு; ஜபிக்கப்பட்ட திருநாமத்துக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 56

தாமரைபோன்ற இளஞ்சிவப்பு நிறமான திருவடிகள் கொண்டவருக்கு; இவ்வியனுலகின் ஆத்மாவே வடிவானவருக்கு; தாமரைக்குகந்த ஸூர்யனின் குலத்துக்குகந்தவருக்கு; கடலில் பள்ளி கொண்டவருக்கு நமஸ்காரங்கள். 57

ஜானகியை நல்மனைவியாய்க் கொண்டவருக்கு; பிச்சிப்பூ அணிந்தவருக்கு; ஜானகி ஜபிக்கும் மந்த்ர ஸாரமானவருக்கு; விழிப்புடனிருப்பவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 58

கௌதமமுனியின் ஶாபத்தை முறியடித்தவருக்கு; வெல்லப்பட்ட இந்த்ரியங்களை உடையவருக்கு; வெற்றியுடையவருக்கு; ஶங்கரனின் வில்லை முறித்தவருக்கு; ஸீதையை வென்றவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 59

பரசுராமரை வென்றவருக்கு; ஶ்ரீராமனுக்கு; ஶங்கரனின் உள்ளத்தை வென்றவருக்கு; தன்னை வென்றவருக்கு; வெல்லப்படமுடியாதவருக்கு; காமத்தை வென்றவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 60

உயிர்கட்காதாரமானவருக்கு; விஷ்ணுவுக்கு; வாழ்வுக்காதாரமான ஸூர்யனுனவருக்கு; உயிராற்றலானவருக்கு; ஒரே ஆத்மாவானவருக்கு; நீர் வடிவிலுள்ளவருக்கு, உமக்கு நமஸ்காரங்கள். 61

ஜீவன்முக்தர்களால் கணீரென்று பாடப்பட்டவருக்கு; ஸத்குருவின் பாட்டுக்களில் மகிழ்பவருக்கு; தன் புகழ் பாடும் இந்த ஶ்லோகங்களின் தெய்வமானவருக்கு; பூஜிக்கப்படவேண்டிய ராமருக்கு, உமக்கு நமஸ்காரங்கள். 62

விரைந்தோடும் கங்கையைத் தோற்றுவித்தவருக்கு; மலரும் இப்புஷ்பங்களால் அர்ச்சிக்கப்பட்டவருக்கு; பிறப்பற்ற பரம்பொருளின் வெளிப்படை வடிவானவருக்கு; வெற்றித்திருமகனுக்கு; உமக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 63

வெற்றியுடையவருக்கு; உயிர்கட்கு எல்லாமானவருக்கு; இவ்விளம் மொட்டுக்களால் அர்ச்சிக்கப்பட்ட ஒளியானவருக்கு; ஶிவனுல் த்யானிக்கப்பட்ட நற்றிருநாமமுடையவருக்கு; அறிவுக்கப்பாற்பட்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 64

அறிவுமயமான பரமாத்வான விஷ்ணுவுக்கு; அறிந்து அடையப் படவேண்டியவருக்கு; அறிவின்பமே தன் வடிவாகக் கொண்டவருக்கு; அறிவில் முதிர்ந்தோர் உள்ளத்திலிருப்பவருக்கு; அறிவுச்சுடரொளிக்கு, உமக்கு நமஸ்காரங்கள். 65

அறியப்பட வேண்டியவருக்கு; எல்லாம் அறிந்தவருக்கு; அறியும் விருப்பினை நிறைவேற்றும் ஆசார்யனுனவருக்கு; வெற்றிஒலி முழங்கும் அம்புகளும் கோதண்டமும் ஏந்திய கோதண்டராமனுகிய உமக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 66

ஜங்காரஶ்ருதியுடன் பாடப்பட்டவருக்கு; டங்கார ஒலியெழுப்பும் வில்லுடையவருக்கு; தாள ஒலியில் மகிழ்பவருக்கு / தாள ஒலியின் மகிழ்வானவருக்கு; பூஜா விக்ரஹ உருவில் உள்ளவருக்கு நமஸ்காரங்கள். 67

வீணையின் இன்னிசை ஒலியில் மகிழ்பவருக்கு; வீணை ஒலியில் ஒன்றியவருக்கு; வீணை இசைப்ரியருக்கு; வீணையில் இசைக்கப்படும் பண்ணுய் இருப்பவருக்கு / வீணையை விரும்புபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 68

தாளவாத்யங்களில் மகிழ்பவருக்கு; தாராகணங்களின் அரசனை நிலவுமுகம் கொண்டவருக்கு; கடைத்தேற்றும், இன்பூட்டும் திருநாமம் கொண்டவருக்கு; கடைத்தேற்றுபவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 69

மங்கலமானவருக்கு; மங்கல நற்றிருநாமமுடையவருக்கு; ஶிவனல் துதிக்கப்பட்டவருக்கு; புனிதத்தலங்களிற் புனிதமான திருநாமம் உடையவருக்கு; பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவிப்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 70

தும்புருவால் துதித்துப் பாடப்பட்டவருக்கு; அமைதியிலுதித்த 'ஓம்'காரமானவருக்கு; விஷயதாகத்தை அழிப்பவருக்கு; விரும்பப் படவேண்டியவருக்கு; நிறைவேறிய விருப்பங்களுடையவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 71

ஒளியில் கணக்கற்ற ஸூர்யர்களை வென்றவருக்கு; ஆற்றலும் ஒளியும் அளிப்பவருக்கு; ஒளிமயமானவருக்கு; கடல்போல் ஆழங்காண முடியாதவருக்கு; நீர்வடிவிலுள்ள பரமாத்மாவுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 72

இசை, கூத்து, வாத்யம் இவற்றல் துதித்து வணங்கப்பட வேண்டியவருக்கு; இம்மூன்றையும் விரும்புபவருக்கு; எல்லாவற்றையும் துறந்த நல்லிதயம் கொண்டோரிடம் இருப்பவருக்கு; த்யாகத்தோடிணைந்தவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 73

த்யாகப்ரம்மத்தினல் நன்கிணையப்பட்டவருக்கு; த்யாகராஜரால் துதிக்கப் பட்டவருக்கு; த்யாகப்ரம்மத்தின் நல்வாக்கிலுள்ளவருக்கு; ஶ்ரீராமனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 74

த்யாகராஜரின் இஷ்ட தெய்வமானவருக்கு; த்யாகராஜரால் அர்ச்சிக்கப் பட்டவருக்கு; த்யாகராஜரின் துதிகளில் மகிழ்பவருக்கு; ஶ்ரீராமனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 75

த்யாகப்ரம்மத்தின் பக்ஷத்திலிருப்பவருக்கு; த்யாகராஜரை விரும்புபவருக்கு; த்யாகப்ரம்மத்தின் கண்முன் இருப்பவருக்கு; ஶ்ரீராமனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 76

த்யாகராஜக்ருதிகளில் இருப்பவருக்கு; த்யாகராஜரால் நன்கு பாடப்பட்ட பரமாத்மாவானவருக்கு; த்யாகப்ரம்மத்தின் ஆத்மாவின் ஒன்றல் கொண்டவருக்கு; ஶ்ரீராமனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 77

காப்பதில் நிகரற்ற கடவுளானவருக்கு; வேதங்களின் ஸாரமான ஒளியானவருக்கு; முக்குணங்கட்கப்பாற்பட்ட உண்மையானவருக்கு; ஶ்ரீராமனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 78

மூவுலகங்களிலும் வணங்கப்பட்ட ஈஶனுக்கு; மூவகைத் துன்பங்களேயும் பிளப்பவருக்கு; மூவுலகங்கட்கப்பாற்பட்ட தெய்வத்திற்கு; த்ரிவிக்ரமனுக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 79

தக்ஷனுக்குப் பாடம் கற்பித்தவரால் துதிக்கப்பட்டவருக்கு; பொறுமை, அமைதி இவற்றை அளிப்பவருக்கு; உள்ள வெளியில் வஸிப்பவருக்கு; தயையின் உச்சியானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 80

விளையாட்டகப் பத்து அவதாரங்கள் செய்தவருக்கு; நிலைமையை நன்மை நிறையச்செய்பவருக்கு; பத்துத்தலை ராவணனை மாய்த்தவருக்கு; தாஶரதிக்கு; துதித்துப் பூஜிக்கப்பட்டவருக்கு நமஸ்காரங்கள். 81

திவ்யமான ஸூர்யவம்ஶமெனும் மலையில் விளக்கானவருக்கு; எல்லாம் அளிப்பவருக்கு; ஸூர்யகுலத்துதித்தவர்கள் எனும் கடலைப் பொங்கச்செய்யும் சந்த்ரனனவருக்கு; திவ்யமானவருக்கு; உமக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 82

கண்முன் திவ்யமான கங்கையை உடையவருக்கு; திவ்யமான கங்கையில் மகிழ்பவருக்கு; திவ்யப்ரயாகையின் தெய்வமானவருக்கு; ரகுநாதனுக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 83

நீண்ட ஆயுளை அளிக்கும் கடவுளுக்கு; துன்புற்றோரைக் காப்பதே வ்ரதமாகக் கொண்டவருக்கு; துன்பத்தைத் தடுப்பவருக்கு; அடைவதற்கரியவருக்கு / வெல்லப்படமுடியாதவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 84

துர்காவின் ஸஹோதரருக்கு; அடைதற்கரிதானவருக்கு / துன்பங்களை ஓடச்செய்பவருக்கு; அடைவதற்கரிய பனிமலை வடிவிலுள்ளவருக்கு; அடைதற்கரிய கங்கையே மாலையாக அமைந்தவருக்கு; ஆழ்ந்தரிய முடியாதவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 85

பாபத்திரள்களைத் தொலைவு பெறச்செய்தவருக்கு; அபயம் அளிப்பதே உறுதியான வ்ரதமாகக் கொண்டவருக்கு; உடலையும் உயிரையும் வளம்பெறச் செய்பவருக்கு; ஆசார்யனானவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 86

தேவர்கள் முதலியோரால் தேடப்பட்ட திருவடிகள் உடையவருக்கு; தேவதேவர்களால் அர்ச்சிக்கப்பட்டவருக்கு; தெய்வீகமான கங்கையின் பிறப்பிடமானவருக்கு; தேவர்களின் ஈஶனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 87

கடவுளானவருக்கு; தைத்யர்களை அழித்தவருக்கு; ஊஞ்சலில் ஏற்றப்பட்ட உற்சவமூர்த்திக்கு; டோலோத்ஸவத்தில் இனிது பாடப்பட்டவருக்கு; குற்றங்களை அகற்றுபவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 88

வலுவின்மையையும் களைப்பையும் களைபவருக்கு; துன்பத்தை ஓடிடச் செய்பவருக்கு; விண்ணுலக நதியான கங்கையைத் தோற்றுவித்தவருக்கு; ஒளியும் மங்கலமும் பொருந்தியவருக்கு; ஒளியைப்பொழிபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 89

ஒளிவட்டத்தால் சூழப்பட்டவருக்கு; உள்ளக்குகையை ஒளியூட்டுபவருக்கு; விறைவில் முழுமைநிலை பெறச்செய்பவருக்கு; விரைந்து செல்லும் பாணங்களை உடையவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 90

எதிர்மறைகட்கப்பாற்பட்டவருக்கு; எதிர்மறைகளாய் இருப்பவருக்கு; எதிர்மறைத் துன்பங்களைத் தவிர்ப்பவருக்கு; இவ்வுலகும் மறுவுலகுமான

இருபொருளருள்பவருக்கு; இரண்டாக வேறுபட்ட நிலையையும் ஒன்றுக இருக்கும் நிலையையும் விளக்குபவருக்கு /இரண்டாக வேறுபட்டும் ஒன்றுகவும் உள்ளவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 91

மலையைப்போன்ற உறுதிகொண்டவருக்கு; அரசர்களால் துதிக்கப் பட்டவருக்கு; பூமியின் புதல்வியான ஸீதையின் மணுளனுக்கு; தர்மாத்மாவுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 92

நற்குணங்கள் நிறைந்தவருக்கு; தர்மத்தைக் காப்பவருக்கு; மழைமேகத்தின் கம்பீரக்குரலுடையவருக்கு; மழை முகிலின் ஒளிபடைத்த வடிவினருக்கு; காக்கும் ஸ்ரீமஹாவிஷ்ணுவாகிய உமக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 93

த்யானிக்கப்படவேண்டிய, இதயமாம் புனிதத்தலத்து தெய்வமானவருக்கு; இவ்வெண்ணக் கோயிலில் உறைபவருக்கு; எப்போதும் எண்ணப் பட்டவருக்கு; பக்தியுடன் பாடப்பட்டவருக்கு; வால்மீகிராமாயணத்தின் வீர நற்கதாநாயகானுனவருக்கு, உமக்கு நமஸ்காரங்கள். 94

கடலில் உறைபவருக்கு; வாயு மைந்தனின் உள்ளத்தில் உறைபவருக்கு / வாயுபுத்ரனுல் ஸேவிக்கப்படுபவருக்கு; தூபதீபங்களுடன் ஸேவிக்கப்பட வேண்டியவருக்கு; நாயகனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 95

கோதண்டமெனும் வில்லை ஏந்தியவருக்கு; உறுதியளிப்பவருக்கு; காத்திடும் விஷ்ணுவுக்கு; கைப்பிடித்து வழி நடத்துபவருக்கு; அமைதியுள்ளவருக்கு நமஸ்காரங்கள். 96

பருகவேண்டிய அமுதப்பெயர் கொண்டவருக்கு; துணிவும் திறமையும் அருள்பவருக்கு; தொடர்ந்து திருநாமத்தைப் பாடப்படவேண்டியவருக்கு; தூயவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 97

த்யானிக்கப்படவேண்டியவருக்கு; த்யானத்தால் அடையப்பட வேண்டியவருக்கு; த்யானம் புரிபவரின் உள்ளத்தில் விளங்குபவருக்கு; த்யானிக்கப்படுபவருக்கு; ஸ்ரீராமனுக்கு; த்யானிக்கப்பட்ட 'ஓம்'காரமாகிய உமக்கு நமஸ்காரங்கள். 98

உறுதியாக வீட்டுப்பேறளிப்பவருக்கு; அந்தராத்மாவான விஷ்ணுவிற்கு; ஒலிக்கப்பட்ட 'ஓம்'கார நாதமானவருக்கு / 'ஓம்'கார நாதத்தை ஒலிப்பவருக்கு; ஒலிவடிவானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 99

வணங்கினவர் வாழ்வின் மூச்சானவருக்கு; வணங்கியவர் உள்ளத்தை அமைதிப்படுத்துபவருக்கு; வணங்கப்பட்டவருக்கு; வணங்கப்படவேண்டியவருக்கு; மகிழ்ந்திடத்தக்கவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 100

வணங்கியவரைக் காப்பதில் மகிழ்பவருக்கு; புத்தம்புதிய இனிய பாட்டுகளால் பாடப்பட்டவருக்கு; வணங்கிய அரசர்களால் ஏத்தித் துதிக்கப்பட்டவருக்கு; மாந்தர்களில் உயர்ந்தவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 101

மனித வேடத்தில் பூமியைப் பரிபாலித்தவருக்கு; இளம் மன்மத வடிவினருக்கு; அகன்ற தாமரைக் கண்கள் கொண்டவருக்கு; மாந்தரின் இன்பமானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 102

இன்னிசை நாதத்தினுல் பூஜிக்கப்பட வேண்டியவருக்கு; நாதத்தின் இன்பமாயும் லயத்தின் ஆத்மாவாகவும் உள்ளவருக்கு; நாதோபாஸனையில் மகிழ்பவருக்கு; நாத உருவானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 103

நாரதரினுல் மகிழ்வுடன் பாடப்பட்டவருக்கு; பாம்பரசன் மேல் பள்ளிகொண்டவருக்கு; நாரதரின் இசையில் மகிழ்பவருக்கு; நாராயணனுகிய உமக்கு நமஸ்காரங்கள். 104

நிகமாகமங்களின் ஸாரமானவருக்கு; சலனமற்று இன்புற்றிருக்கும் உள்ளம் கொண்டவருக்கு / உள்ளத்தைச் சலனமற்று இன்புற்றிருக்கச்செய்பவருக்கு; நிஜதாஸர்களை நன்கு காப்பவருக்கு; நோயற்ற தன்மை அருளுபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 105

என்றும் புதிய இளமை வடிவானவருக்கு; அன்றுட உற்சவங்களும் பூஜைகளுமே யாகமாகக் கொள்பவருக்கு / அன்றுட உற்சவம், பூஜை, யாகங்களில் கொண்டாடப்பட்டவருக்கு; என்றுமிருக்கும் தன்மையை

வரமாக அருள்பவருக்கு; என்றுமிருக்கும் இன்பமானவருக்கு / என்றுமிருக்கும் இன்பம் அருள்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 106

உறக்கம், சோம்பல் இவற்றுக்கு வெகு தூரத்தில் இருப்பவருக்கு; வேதங்களில் ஸஞ்சரிப்பவருக்கு; நிர்வாண பலனருள்பவருக்கு; தூயவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 107

தூய நீலவண்ண வடிவுடையவருக்கு; பாற்கடலுதித்த மஹாலக்ஷ்மிக்கு மகிழ்வூட்டுபவருக்கு; நீருண்ட மேகத்தின் காந்தி படைத்தவருக்கு; தாமரைக்கண்ணினருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 108

துதிபாடுவதிற்சிறந்த ஸத்குரு ஶ்ரீத்யாகப்ரம்மத்தால் இனிது பாடப் பட்டவருக்கு; நூபுரங்கள் ஒலிக்கும் நடை கொண்டவருக்கு; புத்தம்புதிய பாலை அருந்துபவர்க்கு; விரைந்து உடனடியாகக் காப்பவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 109

கூத்து, வாத்தியம் இவற்றுடன் இனிது பாடப்பட்டவருக்கு; நரஸிம்மராக அவதரித்தவருக்கு; அரசர்களில் உயர்ந்தவருக்கு; வழிகாட்டுபவருக்கு; விழிக்கின்பமானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 110

விழிகட்கு விருந்தான நல்வடிவு படைத்தவருக்கு; என்றுமிருக்கும் தன்மையும் ஸங்கீத ஸித்தியும் அருள்பவருக்கு; நிகமாகமங்களில் உள்ள ஸத்துவமானவருக்கு; மோன முக்திநிலை அருள்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 111

என்றுமிருக்கும் தன்மை, தூய்மை இவற்றின் உருவானவருக்கு; உறுதியான பக்தியும் செயல் விடுதலையும் அளித்து வீட்டுப் பேறளிப்பவருக்கு; எல்லாமாய் உள்ளவருக்கு; ஒரே சொல் கொண்டவருக்கு; ஒரே பரமாத்மாவிற்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 112

தர்மத்தைத் தூண்டிக் கற்பித்தவருக்கு; ஒன்பது விதமான பக்தியுடன் பாடப்பட்டவருக்கு; உலக வாழ்வைக் கடக்கும் ஓடமான தாரக நாமம் கொண்டவருக்கு; நியாய வடிவானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 113

பட்டாபிராமசந்த்ரனுக்கு; தாமரைக் கண்ணினுள் ஸீதையால் மகிழப்பட்டவருக்கு; காற்றின் புதல்வனுன மாருதிக்கு ஆப்தரானவருக்கு; முழுநிறைவானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 114

பரப்ரம்ம வடிவானவருக்கு; பேரின்ப அறிவு நிதியானவருக்கு; பஞ்சநத க்ஷேத்ரத்தின் ஈஶனை ஶிவனால் பாடப்பட்டவருக்கு / பஞ்சநத க்ஷேத்ரத்தின் இசை அரசரான த்யாகப்ரம்மத்தால் பாடப்பட்டவருக்கு; மேலான ஈஶனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 115

பாபங்கள் இல்லாமல் செய்பவருக்கு; மங்கள ஒளி கொண்டவருக்கு; பாபத்தின் தோற்றுவாயை அழிப்பவருக்கு; பாபங்களைக் கழுவிடும் கங்கையைத் தோற்றுவித்தவருக்கு; தூயவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 116

பாமரர்கள் கூட்டத்தினின்று வெகுதூரத்தில் இருப்பவருக்கு; பாஶ பந்தங்களைப் பிளப்பவருக்கு; பாமர அஸுரர்களுக்கு அச்சுறுத்துபவருக்கு; பூமியின் மகளான ஸீதையை மணந்தவருக்கு நமஸ்காரங்கள். 117

தந்தை சொல் காத்தவருக்கு; மஞ்சள்பட்டு உடுத்தியவருக்கு; தாமரைமலர் மாலை அணிந்தவருக்கு; இதயப்பீடத்தில் நன்கு வஸிப்பவருக்கு; அமுதக்கடலானவருக்கு நமஸ்காரங்கள். 118

புண்யதீர்த்தமான திருநாமங்கள் கொண்டவருக்கு; மறுபிறவியைத் தடுப்பவருக்கு; தொன்மையானவரூகு; மிகவும் புனிதமானவருக்கு; மலர்களால்/புஷ்பாவினுல் அர்ச்சிக்கப்பட்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 119

பூர்ணவதாரமானவருக்கு; பூஜிக்கப்படவேண்டியவருக்கு; முழுமதியென முகப்பொலிவுடையவருக்கு; முழுமை நிறைவளிப்பவருக்கு; முழுநிறைவானவருக்கு; முழுமை இன்பமானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 120

பெருஞ்சிறப்புடன் விளங்குபவருக்கு; பெருஞ்சிறப்பளிப்பவருக்கு; காற்றின் புதல்வனுக்கு ஆப்தருக்கு; பூமிக்கதிபதிக்கு நமஸ்காரங்கள். 121

மென்மையான வியன்தரு எழிற்றிருவடிகள் கொண்டவருக்கு; பருக அமுதான பேச்சுடையவருக்கு; மென்மை அழகுடன் மொழிபவருக்கு; தூயவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 122

தூய மேலோரால் பாடப்படுபவருக்கு; காற்றின் மைந்தனுல் த்யானிக்கப்பட்ட வடிவினருக்கு; காற்றின் மைந்தனுல் பற்றிக்கொள்ளப்பட்ட திருவடிகொண்டவருக்கு; புலஸ்தியர் வம்ஶத்தவனே (ராவணனே)அழித்தவருக்கு நமஸ்காரங்கள். 123

இயற்கையே தன் வெளிப்படையான வடிவானவருக்கு; இயற்கையில் மறைந்துள்ள ஆற்றலானவருக்கு; ஶரணடைந்தவரின் ஒரே காப்பானவருக்கு; உலகைக் காப்பவருக்கு நமஸ்காரங்கள். 124

வணங்கியவர் அறிவு விழிப்படையச் செய்பவருக்கு; மேம்பட்டவருக்கு; வியன்தரு சிறப்புடையவருக்கு; வணங்கியவர் பாபங்களே அழியச்செய்பவருக்கு; அமைதி இயல்புடையவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 125

முழுமுதற் பொருளானவருக்கு; தனிப்பட்ட பேரொளி படைத்தவருக்கு; நீண்ட வலிவான திருக்கரங்கள் கொண்டவருக்கு; பழமையான காவ்யமாகிய ஶ்ரீமத்ராமாயணத்தின் நாயகருக்கு; எல்லாம் அறிந்தவருக்கு, உமக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 126

கைகூப்பி வணங்கும் இவளுக்கு உள்ளுயிர்ப்பளிப்பவருக்கு; அனேத்துயிருக்கும் நற்கதி அளிப்பவருக்கு; புலரிப்பொழுதிற்குமுன் இனிது பாடப்பட்டவருக்கு; உயிருக்குயிரானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 127

அடையப்பட்ட விருப்பங்களுடையவருக்கு/விருப்பங்களே அடையச் செய்பவருக்கு; விருப்பமாய் இருப்பவருக்கு; வேண்டப்பட்ட பொருளேக் கொடுப்பவருக்கு; வேண்டுதல் வரமளிக்கும் தெய்வத்திற்கு; ப்ரார்த்திக்க வேண்டியவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 128

விரும்பியவர்க்கினியவருக்கு; மகிழ்வூட்டுபவருக்கு; நற்பக்தியுடன் பாடுதலில் மகிழ்வுறுபவருக்கு; மிகவும் அன்புக்குரியவருக்கு;

காணத்தக்கவருக்கு; முழுமைநிறைவளிப்பவருக்கு நமஸ்காரங்கள். 129

பாம்பரசன் மேல் பள்ளிகொண்டவருக்கு; நெற்றிக்கண்ணனாகிய ஶிவனால் துதிக்கப்பட்டவருக்கு; மலர்ந்த தாமரையொத்த கண்களுடையவருக்கு; மலர்ந்த முகமுடைய உமக்கு நமஸ்காரங்கள். 130

பதரீகாஶ்ரமத்திலிருப்பவருக்கு; நரநாராயணர்களாய் உள்ளவருக்கு; பதரீ எனும் புண்ணியத்தலத்து தெய்வமானவருக்கு; பதரீயைக் காப்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 131

பலராமராய் அவதரித்தவருக்கு; பலராமரின் தம்பியானவருக்கு; வலிவும் நோயற்ற தன்மையும் அருள்பவருக்கு; மிக்க வலிவுடையவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 132

இளஞ்சூரியனை நிகர்த்த நல்லொளி படைத்தவருக்கு; இளஞ்சூரியனை நிகர்த்த ஒளி பொருந்திய ஆடை அணிந்தவருக்கு; பாலலீலைகளினால் மகிழ்வித்தவருக்கு; பாலராமனுக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 133

காக்கும் பெருமை வாய்ந்த அம்புகளுடையவருக்கு; உள்ளம் உருகிக் கண்ணீர் தொண்டையை அடைக்கப் பாடப்பட்டவருக்கு; யானைத் துதிக்கை போன்ற கரங்களுடையவருக்கு; துன்பத்தை அழிப்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 134

பில்வம் முதலிய இலைகளினால் பூஜிக்கப்படவேண்டியவருக்கு; உள்ளக்குகையாம் புனிதத்தலத்தில் வஸிப்பவருக்கு; பிம்பபலம் போன்ற உதடுகளும் புன்னகைத் திருமுகமும் கொண்டவருக்கு; ஆகாயமே ஆடையாகக்கொண்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 135

ப்ரணவ வித்தே பெயராக உடையவருக்கு; ‘ஓம்’ எனும் வித்தெழுத்தில் உறைபவருக்கு; முழுமுதலான ‘ஓம்’காரத்தின் உள்ளிருக்கும் நாதமானவருக்கு; ப்ரணவ வித்தின் வடிவானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 136

அறிவுக்கப்பாற்பட்டவருக்கு; அறிவு வடிவானவருக்கு; அறிவாளிகளாம் பெரியோர்களைக் காப்பவருக்கு; விளையாட்டென புத்தராய் அவதரித்தவருக்கு; அறிவை விழித்தெழச்செய்பவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 137

மாபெரும் அண்டங்கட்கதிபதியானவருக்கு; காக்கும் கடவுளுக்கு; 'ஓம்'கார வித்தின் வடிவானவருக்கு; அறிவு விழித்திடச்செய்யும் ஸத்குருவின் வடிவானவருக்கு; ப்ரம்மஒளியானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 138

ப்ரம்மனின் இயல்பான தத்துவ வடிவானவருக்கு; ப்ரம்மானந்த ஒளி வீசுபவருக்கு; ப்ரம்மன் ஒன்று எனும் உண்மையை போதிப்பவருக்கு; ப்ரம்ம வித்தான 'ஓம்'காரமானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 139

பக்தருக்குட்பட்டவருக்கு; நலம் தருபவருக்கு; பக்தியுடன் செயும் இத்துதியை விரும்புபவருக்கு; பக்தர் விரும்புவன அளிப்பவருக்கு; பக்தரால் விரும்பப்படுபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 140

மங்கல நற்சிறப்புடையவருக்கு; பிறவிப்பிணியைத் தடுப்பவருக்கு; ஸஹோதரி பார்வதியால் மகிழப்பட்ட திருநாமமுடையவருக்கு; அச்சத்தை அகற்றுபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 141

இவ்வுலகில் அனுபவிக்கும் துன்பத்திற்கு முற்றுப்புள்ளியானவருக்கு; இவ்வுலகில் நல்மங்கலம் நல்குபவருக்கு; இவ்வுலகவாழ்வைக் கடக்கச்செய்யும் தாரக நாமம் கொண்டவருக்கு; பிறவித்துன்பத்தை நீக்குபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 142

ஶிவனுடைய வில்லை முறித்தவருக்கு; ஶிவனால் துதிக்கப்பட்ட சிறப்புடையவருக்கு; ஶிவனின் உள்ளத்தில் த்யானிக்கப்படுபவருக்கு; ஶிவனை விரும்புபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 143

உள்ளன்புடையவரால் த்யானிக்கப்பட்ட தெய்வமானவருக்கு; உள்ளாழ்ந்த அன்புடன் துதிக்கப்பட்டவருக்கு; இவ்வெண்ணங்களில் நிலைத்துள்ளவருக்கு; இப்படைப்பாக உள்ளவருக்கு; ஒளியினால் சூழப்பட்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 144

இப்பிறவிக்கடலைக் கடக்கும் தோணியானவருக்கு; மனிதத்தன்மைக்கு அப்பாற்பட்ட ஆற்றலானவருக்கு; உணர்வின் தூய்மையில் மகிழ்பவருக்கு; பிறவி இல்லாதவருக்கு / பிறவி இல்லாமல் செய்பவருக்கு; மேலான உண்மையானவருக்கு; இப்படைப்பின் உட்பொருளானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 145

நோயகற்றும் நாதத்தின் ஸாரமானவருக்கு; அச்சத்தைப் பிளப்பவருக்கு; பரமாத்ம ஒளியானவருக்கு; பீஷ்மரால் ஶ்லோகித்துப் பாடப்பட்ட நற்றிருநாமமுடையவருக்கு; பீமனுல் அர்ச்சிக்கப்பட்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 146

அனைத்துலகுக்கும் ஆணி வேரானவருக்கு; மூவுலகங்களையும் காப்பவருக்கு; இவ்வுலகில் இன்பமும் முயற்சியின் நிறைவும் வீட்டுப்பேறும் அருள்பவருக்கு; உலகங்கட்கெல்லாம் ஈஶனுனவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 147

மன்னர்களால் அர்ச்சிக்கப்பட்ட, பூமிக்கதிபதியானவருக்கு; பூமியின் புதல்வியான ஸீதையின் மகிழ்வினை வளர்ப்பவருக்கு; ஸீதையைப் புலகிடச்செய்யும் வீரம் கொண்டவருக்கு; பேரொளிக்கிருப்பிடமானவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 148

ப்ருகுவின் புதல்வரின் வில்லை வென்றவருக்கு; ப்ருகுவை மகிழ்விக்கும் உருவினருக்கு; தன்னைச் சார்ந்திருப்போரிடம் வாஞ்சையுடன் பேசுபவருக்கு; அண்டினோரைக் காப்பவருக்கு நமஸ்காரங்கள். 149

மருந்தே ஆன இன்ப நற்பெயருடையவருக்கு; ஸஹோதரி பைரவியின் அன்பில் / பைரவீ ராகத்தில் மகிழ்பவருக்கு; மருத்துவத்தன்மைகொண்ட ராகத்திற்கிருப்பிடமானவருக்கு; (பிறவிப்பிணிக்கு) மருந்தானவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 150

அரவரசன்மேல் ஒளி வீசுபவருக்கு; விஷய தாகத்தைப் போக்குபவருக்கு; பாம்பை உண்ணும் கருடனை வாகனமாகக்கொண்டவருக்கு; பாம்பரசன் மேல் பள்ளிகொண்டவருக்கு நமஸ்காரங்கள். 151

பூமியைப்பரிபாலிக்கும் அரசகுமாரருக்கு; உலகங்கட்கெல்லாம் பேரரசரானவருக்கு; பௌளீ ராகத்தில் துதிக்கப்பட்டவருக்கு; சுற்றிச்சுழலும் உள்ளத்தை அமைதிப்படுத்துபவருக்கு; புருவங்கள் மத்தியில் நிலைக்கும் உள்ளத்தில் உள்ளவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 152

மங்கள இன்ப வடிவானவருக்கு; மங்கல இன்பம் நல்குபவருக்கு; மங்கள இன்பப்பெயரினருக்கு; மங்களமானவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 153

மிகவும் மதிக்கப்பட்ட குணங்களே அடையாளமாகக் கொண்டவருக்கு; அன்னை லக்ஷ்மியின் உள்ளத்தை மகிழ்விப்பவருக்கு; லக்ஷ்மியின் இருப்பிடமானவருக்கு; மதிக்கத்தக்கவருக்கு; லக்ஷ்மியின் உள்ளத்துள்ள விஷ்ணுவுக்கு / லக்ஷ்மியின் உள்ளக்கடலில் உறைபவருக்கு / லக்ஷ்மியின் உள்ளச்செல்வமானவருக்கு நமஸ்காரங்கள். 154

ஸூர்யனின் புதல்வனுன ஸுக்ரீவனின் நல் நண்பனுனவருக்கு; ஸூர்யவம்ஶத்தின் ஒளித் தோன்றலானவருக்கு; ஸூர்யோதயத்தில் இனிது பாடப்பட்டவருக்கு; மிகச் சிறந்த நண்பனுனவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 155

இனிய வாக்கினுல் துதித்துப் பாடப்பட்டவருக்கு; இனிய இசையில் மகிழ்பவருக்கு; இனிய ஸுஸ்வரமே மொழியாகக் கொண்டவருக்கு; இசை இனிய மொழியுடையவருக்கு; இனிய பெயருடையவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 156

பொய்க்கப்பாற்பட்ட ஒரே மெய்யானவருக்கு; கரைகாணுப் பெருமையுடையவருக்கு; முக்தியளிக்கும் நற்றிருநாமமுடையவருக்கு; முக்தி ஒளியானவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 157

முக்தரான ஸத்குருவால் பாடப்பட்டவருக்கு; முக்தி விரும்புபவர்களின் அடைக்கலமாம் பெருமையுடையவருக்கு; முனிவர்களால் த்யானிக்கப்பட்ட திருவடியுடையவருக்கு; முனிவர்கள் வணங்கத் தக்கவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 158

வாக்குத்திறனற்ற இவளுக்கு வாக்களிக்கும் தெய்வத்திற்கு; இவ்வாக்குத் திறனற்றவளின் வாக்கினால் நன்கு துதிக்கப்பட்டவருக்கு; மூலாதாரத்தினின்றெழும்பும் நாதமாய் இருப்பவருக்கு; மூலஸ்தானத்தில் இருப்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 159

தன்னைத் தேடுபவருக்கு அறிவொளி விழித்திடச் செய்பவருக்கு; கானல் நீரை நாடும் தாகத்தினைப் போக்கிடுபவருக்கு; யமனுலக அச்சத்தை அழிப்பவருக்கு; ஆதவனின் ஒளியானவருக்கு நமஸ்காரங்கள். 160

மென்மையான, ஸத்துவம் நிரம்பிய இனிய பேச்சுடையவருக்கு; மென்மையான இவ்வுள்ளத்தில் வஸிப்பவருக்கு; மென்மையான இசையில் இன்புறுபவருக்கு; மென்மையான குரலுடையவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 161

மெல்லினிய குரலில் பாடப்பட்டவருக்கு; ம்ருதங்கத்தின் லயத்தில் மகிழ்பவருக்கு; மென்மையான, ஆயினும் வலிவான திருவடி கொண்டவருக்கு; மென்மையே அடையாளமாகக் கொண்டவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 162

முகில்முழக்கம் போல் ஆழ்ந்தொலிக்கும் குரலுடையவருக்கு; மேதைத் திறனாய் ஒளிர்பவருக்கு; கருமுகிலொளி கொண்ட வீரருக்கு; மேருவைப் போன்ற உறுதி படைத்தவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 163

மைதிலியின் உயிர்நாயகருக்கு; வால்மீகியால் பாடப்பட்டவருக்கு; நட்புணர்வு நிரம்பியவருக்கு; பரிவு நிறைந்தவருக்கு; மைதிலீ மணாளனுக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 164

மயக்கும் தோற்றமே அடையாளமாகக் கொண்டவருக்கு; விடுவிப்பவருக்கு; தன்னில் மயக்கம் உண்டுபண்ணுபவருக்கு; மயக்கும் எழில் தோட்டமான ராமனுக்கு; மதி மயக்கத்தை நீக்குபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 165

மௌனமாய் த்யானிக்கப்பட வேண்டியவருக்கு; பாடப்பட வேண்டியவருக்கு; முனிவர்களாலும் அரசர்களாலும்

துதிக்கப்பட்டவருக்கு/ முனிவர்களிற் சிறந்த வால்மீகி/ த்யாகப்ரம்மத்தால் துதிக்கப் பட்டவருக்கு; மௌனமான மனதில் வஸிப்பவருக்கு; மௌனத்தால் அர்ச்சிக்கப்பட்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 166

யதுஶ்ரேஷ்டனாய் அவதரித்தவருக்கு; யாதவனுக்கு; புகழ் படைத்தவருக்கு; யதிஶ்ரேஷ்டர்களால்/ யதிஶ்ரேஷ்டராகிய த்யாகப்ரம்மத்தால் இனிது பாடப் பட்டவருக்கு; லக்ஷ்மீநாயகனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 167

கட்டுப்பட்ட உள்ளத்தில் உறைபவருக்கு; யதிகளுள்ளும் நல்லோருள்ளும் வஸிப்பவருக்கு; லக்ஷ்மியின் உள்ளத்து ஒளியுள் உள்ள அமைதியானவருக்கு; யாகத்தைக் காத்தவருக்கு நமஸ்காரங்கள். 168

ஒருமைப்பட்ட உள்ளத்தில் பூஜிக்கப்படவேண்டியவருக்கு; ஒருமைப்பட்ட பூஜையில் மகிழ்பவருக்கு; தன்னில் ஒன்றிய நிலமகள் மகளான ஸீதையுடன் கூடிய இனிய ராமருக்கு; ஒன்றுன பரமாத்மாவிற்கு; உமக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 169

விரைந்து செல்லும் கங்கையின் மங்கலத் தோற்றுவாயானவருக்கு; நன்மை பயப்பவருக்கு; யோகீந்த்ரரான ஸத்குரு த்யாகப்ரம்மத்தின் இதயமே வாஸமாகக் கொண்டவருக்கு; தன்னில் ஒன்றும் இன்பம் அளிப்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 170

யோகிஶ்ரேஷ்டரானவருக்கு; மனம் ஒன்றுபட்டு இணைந்திட வேண்டியவருக்கு; யோகமாகிய ஸங்கீதத்தில் ஸித்தியளிப்பவருக்கு; உள்ளொன்றித் துதித்துப் பாடப்பட்டவருக்கு; இளமையுள்ளவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 171

ரகுவம்ஶ திலகமாகியவருக்கு; அழகிய திரு உறையும் உள்ளம் கொண்டவருக்கு; எழில் திருமுக ஒளி படைத்தவருக்கு; ரகுராமனுக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 172

விருப்பு வெறுப்பற்றவருக்கு; பண்ணினிமை எழில் வடிவானவருக்கு; இன்னிசையால் பூஜிக்கப்பட வேண்டியவருக்கு; இசையைத் தோற்றுவிப்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 173

ராகதாளகதியில் இருப்பவருக்கு; பண்ணின் இன்னொலியில் ஒன்றியவருக்கு; எழிலுறும் இன்னிசையில் இன்புறுபவருக்கு; ராமசந்த்ரனுக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 174

கதிரவனும் தண்மதியும் கண்களாகக் கொண்டவருக்கு; அரசர்க்கரசருக்கு; ஒளியின் இருப்பிடமானவருக்கு; அரசர்களால் பூஜிக்கப்பட வேண்டியவருக்கு; மிகச்சிறந்த அரசருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 175

பகைவரை அழிக்கும் வீரம் படைத்தவருக்கு; கங்கையின் போக்கினைப் போல் அழகிய பாட்டுகள் கொண்டவருக்கு; ருத்ரனுக்குகந்தவருக்கு; துன்புறுத்தும் இன்னா ஒலிகளை ஓடச்செய்பவருக்கு; வடிவழகினால் புளகாங்கிதமடையச் செய்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 176

எழிலுறு மனைவி கொண்ட ஸ்ரீராமருக்கு; ரேணுகாவின் மைந்தன் உருக்கொண்டவருக்கு; ஶிவனால் ஜபிக்கப்பட்ட திருநாமமுடையவருக்கு; நோயைப்போக்குபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 177

எழிலுறு தோற்றம் கொண்டவருக்கு; ஒளி நிறைந்தவருக்கு; மயிர்க்கூச்சுண்டுபண்ணுபவருக்கு; ரோஹிணியின் புதல்வனாய் வடிவு கொண்டவருக்கு; வானுக்கும் பூமிக்கும் அதிபதியானவருக்கு நமஸ்காரங்கள். 178

சினம் முதலான பகைவரை அழிப்பவருக்கு; சினத்துடன் பகைவரை அழித்தவருக்கு; தங்கம் போல் ஒளிரும் ஸீதையை மனைவியாகக் கொண்ட ராமனுக்கு; தங்கமான குணங்கள் கொண்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 179

லக்ஷ்மியை மகிழ்விக்கும் தூயவருக்கு; ஶுபலக்ஷணங்களை அடையாளமாகக் கொண்ட உருவினருக்கு; தம்பி லக்ஷ்மணனுக்கு

ஸேவிக்கப்பட வேண்டியவரானவருக்கு; தனிப்பட்ட இயல்பினருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 180

நோக்கமாகக் கொள்ளப்பட வேண்டியவருக்கு; பற்றிக்கொள்ளப் படவேண்டியவருக்கு; லங்கேஸனை மாய்த்தவருக்கு; மென்மையான, இன்பம் பயக்கும் குணங்கள் படைத்தவருக்கு; எளிதாய் இனிது துதித்துப் பாடப்பட்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 181

மிகுந்த விருப்பினை நிறைவேற்றும் ராமனுக்கு; எழில்மிகு ஸ்ரீராமமூர்த்திக்கு; மிகவும் போற்றப்பட்ட இன்பமான ஸ்ரீராமனுக்கு; ஆடிப்பாடப்பட்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 182

இவ்வெழுத்தில் பளிச்சிடும் வடிவானவருக்கு; லிங்க வடிவானவருக்குப் ப்ரியரானவருக்கு; அன்புச்சாறு பூசப்பட்டவருக்கு; இவ்வெழுத்துக்களால் அர்ச்சிக்கப்பட்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 183

தன்னில் ஒன்றிய உள்ளத்தில் ஒன்றியவருக்கு; ஒன்றிய ஸுஸ்வரத்தை உடைய (ஸுஸ்வரத்தோடொன்றிய) இப்பாட்டுக்களாய் இருப்பவருக்கு; லீலையில் வல்ல ராமனுக்கு; லீலையாய் அவதரித்தவருக்கு நமஸ்காரங்கள். 184

பேராசைபோன்ற குற்றங்களைப் போக்குபவருக்கு; விரும்பிய குறிக்கோளான மேலான இன்பம் நல்குபவருக்கு; அலைமோதும் உள்ளத்துள் அமைதியானவருக்கு; விரும்பப்பட்ட செல்வமானவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 185

பக்தரின் பாபத்திரள்கள் அழியச்செய்பவருக்கு; பறிக்கப்பட்ட (இவ்வெண்ண)மலர்களால் அர்ச்சிக்கப்பட்டவருக்கு; அணிசெய்யும் இந்த ஶ்லோகங்களின் அக்ஷர ஒளியானவருக்கு; ஒளிக்கதிர்மாலை அணிந்தவருக்கு நமஸ்காரங்கள். 186

இந்த ஶ்லோகப் பொழிவை எழுதச் செய்தவருக்கு; எழுதப்பட வேண்டியவருக்கு; எழுதுபவருக்கு; எழுத்தானவருக்கு; எழுத்தில் சித்தரிக்கப்படவேண்டியவருக்கு; இவ்வெழுத்தில் நன்குள்ளவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 187

உலகைக் காப்பவருக்கு; தெய்வீகமானவருக்கு; உலகைக் காக்க அவதரித்தவருக்கு; உள்ளார்ந்த விருப்பத்தை நிறைவேற்றுபவருக்கு; ஸ்ரீமஹாவிஷ்ணுவிற்கு; உமக்கு உள்ளார்ந்த நமஸ்காரங்கள். 188

இவ்வுலகிற்கப்பாற்பட்ட சிறப்புடையவருக்கு; உலகினிலுள்ள, உலகிற்கப்பாற்பட்ட எல்லாவற்றுக்கும் ஆத்மாவாய் உள்ளவருக்கு; இவ்வுலகத் துன்பங்களைத் தடுப்பவருக்கு; உலகில் பரந்து விரிந்துள்ளவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 189

புல்லாங்குழலிசையில் மகிழ்பவருக்கு; குழலூதும் கண்ணனாக அவதரித்தவருக்கு; குலத்தை விளங்கச்செய்யும் ஒளிவிளக்கானவருக்கு; குலத்தை உயர்வுபெறச் செய்தவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 190

வனவாஸத்தில் மிக மகிழ்ந்தவருக்கு; துதிபாடுவோரால் வணங்கப்பட்டவருக்கு; வணங்குவோரால் பாடப்படவேண்டியவருக்கு; வணங்கப்படவேண்டியவருக்கு; தாமரைக்கண்ணனுக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 191

ஆலிலையில் அழகாகப் பள்ளிகொண்டவருக்கு; வராஹமாய் அவதரித்தவருக்கு; வரமளிப்பவருக்கு; மிகச்சிறந்தவருக்கு; மிகச்சிறந்த இன்பமளிப்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 192

இவ்வாக்கெனும் மணமிக்க இலையில் மகிழ்ந்து பள்ளி கொண்டிருப்பவருக்கு; வாக்கிற்கப்பாற்பட்டவருக்கு; வாக்செல்வம் அருள்பவருக்கு; இவ்வாக்கெனும் ஆடை அணிந்தவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 193

இந்திரன் முதலானவர்களால் பூஜிக்கப்படவேண்டியவருக்கு; வாமனனாய் அவதரித்தவருக்கு; பழவினைப் பொறிப்புகளை அழித்திடுபவருக்கு; வாஸுதேவனுக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 194

காற்றை உண்ணும் பாம்பின்மேல் பள்ளி கொண்டவருக்கு; காற்றின் புதல்வனால் துதிக்கப்பட்டவருக்கு; அம்புகள் எய்வதில் இணையற்ற வீரருக்கு; வாதாலயம் எனப்படும் குருவாயூரில் உறைபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 195

ஸூர்ய சந்த்ரர்களால் பூஜிக்கப்படவேண்டியவருக்கு; தன்னை வென்றவருக்கு; இரக்ககுணம் நிறைந்தவருக்கு; விபீஷணனுக்கு அபயம் அளித்தவருக்கு; ஒய்வமைதியானவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 196

வினதாவின் மைந்தனை கருடனை வாகனமாகக் கொண்டவருக்கு; இவ்வியனுலகே வடிவானவருக்கு; விஷ்ணுவிற்கு; விஷயஸுகங்களில் ஈடுபாடுடையோருக்கு வெகுதூரத்தில் உள்ளவருக்கு; இவ்வுலகின் அதிபதியானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 197

விருப்பு, பகை இவையற்றவருக்கு; குற்றமற்றவருக்கு; ஒளியே ஆனவருக்கு; விருப்பற்றவரின் ஒரே விருப்பானவருக்கு; வருத்தமற்றவருக்கு/வருத்தமில்லாமற்செய்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 198

வேத வேதாந்த ஸாரமானவருக்கு; வேதத்தால் அறியப்பட வேண்டியவருக்கு; உலகைப்படைத்தவருக்கு; வேங்கடமலையில் கோயில் கொண்டவருக்கு; வேங்கடேஶனுக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 199

வைதேஹியின் பாக்யமும் மகிழ்வுமானவருக்கு; நற்சிறப்புடை ஶ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டவருக்கு; வைராக்யம், த்யாகம் இவற்றின் வடிவானவருக்கு; வைகுண்டநாதனுக்கு நமஸ்காரங்கள். 200

வெளிப்படையற்றதின் வெளிப்படை வடிவானவருக்கு; நோய், உள்ளத்துன்பம், கெடுதி இவற்றை அழிப்பவருக்கு; எல்லாம் தன் உருவாய் வ்யாபித்துள்ளவருக்கு; வ்யாஸரால் துதிக்கப்பட்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 201

ஶங்கரன் லயித்த நற்பெயருடையவருக்கு; ஶங்கசக்ரங்களை தரித்தவருக்கு; புகழ்பெற்ற தாரகநாமம் கொண்டவருக்கு; ஶரத்காலத்தின் ஒளி படைத்தவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 202

தாமரை போன்ற எழிலொளிர் திருமுகம் கொண்டவருக்கு; அம்புத்திறனில் புகழ்பெற்றவருக்கு; ஶரணடைந்தவரைக் காப்பவருக்கு; காக்கும் கடவுளுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 203

(அகல்யையை) ஶாபத்தினின்று விடுவிக்கும் திருவடி கொண்டவருக்கு; அமைதியின்பத்தை அளிப்பவருக்கு; பார்வதியால் மகிழப்பட்ட திருநாமம் கொண்டவருக்கு; அமைதியே அணிகலனுகக் கொண்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 204

ஶிவனுக்கின்பமான திருநாமமுடையவருக்கு; ஶிவனுக்குகந்த, மங்கலமானவருக்கு; ஶிவனின் மகிழ்வான எழில்திருராமனுக்கு; மங்களம் செய்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 205

அமைதியும் இன்பமும் நல்கும் தண்ணிய கங்கையினுல் அபிஷேகிக்கப்பட்டவருக்கு; குளிர்ச்சியான தொடுகையினுல் அமைதிப்படுத்துபவருக்கு; குளிர்ந்த பார்வையினுல் தீக்ஷை அளிப்பவருக்கு / அமைதித் தண்பனிமலையாம் இமயக்காட்சியே தான் அளிக்கும் தீக்ஷையானவருக்கு; நல்லொழுக்கம் நிறைந்தவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 206

மங்களச் சுரங்கமானவருக்கு; ஒளி வீசுபவருக்கு; மங்களமே அடையாளமாகக் கொண்ட நல்வடிவு கொண்டவருக்கு; முத்துப்போல் சிரிக்கும் ஒளி கொண்டவருக்கு; தூய்மையே வ்ரதமாகக் கொண்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 207

வெறுமையை நீக்குபவருக்கு; பேராற்றல் கொண்டவருக்கு; அழகின் உச்சியானவருக்கு; அழகிய குணங்களுக்கு இருப்பிடமானவருக்கு; அழகிய தோற்றமுடைய ஹரிக்கு நமஸ்காரங்கள். 208

ஆதிஶேஷனுக்கொப்பான நீண்ட கரங்களுடையவருக்கு; ஆதிஶேஷனின் மூச்சினுல் அர்ச்சிக்கப்பட்டவருக்கு; ஆதிஶேஷனும் படுக்கையில் இனிது துயில்பவருக்கு; ஶேஷாசலத்தில் உள்ளவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 209

மலையைப்போல் உயர்ந்த தூயவருக்கு; தர்மத்தில் உறுதிவாய்ந்த மலையை ஒத்தவருக்கு; மலைப்பள்ளத்தாக்கினைப் போல் ஆழமானவருக்கு; உளச்சோர்வினைப் போக்குபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 210

உள்ளத்துன்பமாம் பனிக்குக் கதிரவனனவருக்கு; இத்துதிகளில் தன்னாலேயே பாடப்பட்ட நற்கீர்த்தியுடையவருக்கு; ஶோகத்தில் உதித்த நற்காவ்யமான ஶ்ரீமத்ராமாயண நாயகனுக்கு; இந்த ஶ்லோகங்களில் உகப்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 211

தெய்வத்தன்மை வாய்ந்தவருக்கு; வீர குணங்கள் நிறைந்தவருக்கு; கருமுகிற்குரல் கொண்டவருக்கு; கருநிற எழிலுருக் கொண்டவருக்கு; கருமுகிலொளி படைத்தவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 212

நம்பிக்கையுள்ளவருக்கு முழுமை நிறைவளிப்பவருக்கு; அலுத்தவருக்குப் புத்துயிரளிப்பவருக்கு; (தன்னால்)கேட்கப்பட்ட தனது திவ்ய சரிதமுடையவருக்கு; தன்னை அடைந்தவரைக் காப்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 213

ஶ்ரீஹயக்ரீவர் உருக்கொண்டவருக்கு; லக்ஷ்மியின் உள்ளத்தில் விளங்குபவருக்கு; ஶ்ரீரங்கபுரியில் வஸிப்பவருக்கு; ஶ்ரீலக்ஷ்மீபதிக்கு நமஸ்காரங்கள். 214

திருமகள் உள்ளத்தை மகிழ்விப்பவருக்கு; உள்ளத்தில் மகிழப்படவேண்டியவருக்கு; திருமகள் மணாளனுக்கு; இன்பத்தோடுகூடிய பேச்சுடையவருக்கு; ஶ்ரீ என்னும் மணியை அடையாளமாகக்கொண்ட திருமார்புடையவருக்கு; ஶ்ரீநிவாஸருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 215

ஶ்ருதி தாள ஸ்வரூபமானவருக்கு; வேதங்களில் வஸிப்பவருக்கு; ஶ்ருதியோடிணைந்து இனிது பாடப்பட்டவருக்கு; வேதங்களுக்கு ஆதாரமானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 216

மிக மேம்பட்டவருக்கு; மேலான திருநாமமுடையவருக்கு; மேலான ஸங்கீதத்தினால் துதிக்கப்பட்ட சிறப்புடையவருக்கு; மேலான சரிதையுடைய தூயவருக்கு; மிகவும் உயர்ந்தவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 217

மேன்மையும் தெய்வீகத்தன்மையும் நிறைந்தவருக்கு; செவிக்கினிய குரலுடையவருக்கு; செவிக்கமுதான பேச்சுடையவருக்கு; ஸ்ரீராமனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 218

ஆறு சக்ரங்களிலுள்ள[8] ஆற்றலின் வேரானவருக்கு; ஆறு பகைவர்களை[9] அழிப்பவருக்கு; ஷட்ஜத்தை ஆதாரமாகக்கொண்ட ஸ்ருதியில் இருப்பவருக்கு; ஸ்ரீராமனுக்கு நமஸ்காரங்கள். 219

ஷாடவம், ஔடவம் முதலான ராகங்களாய் இருப்பவருக்கு; பதினாறுவிதமாய் உபசரிக்கப்பட்டவருக்கு; பதினாறு அக்ஷரங்களால் அர்ச்சிக்கப்பட்ட தெய்வத்திற்கு; ஸ்ரீராமனுக்கு நமஸ்காரங்கள். 220

எல்லா ஆகமங்களுக்கும் ஸாரமானவருக்கு; வேண்டுவன எல்லாம் அளிப்பவருக்கு; எல்லாவற்றுக்கும் ஆணிவேரானவருக்கு; எல்லா செல்வங்களும் நல்குபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 221

எல்லாவற்றையும் காக்கும் கடவுளுக்கு; ஸனகர் முதலானவர்களால் துதிக்கப்பட்டவருக்கு; எல்லாத் துன்பங்களையும் தடுப்பவருக்கு; எல்லாருக்கும் ஆப்தருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 222

ஸத்துவமும் காருண்யமும் நிறைந்தவருக்கு; ஸத்துவ ஒளியானவருக்கு; புண்யகங்கையைத் தோற்றுவித்தவருக்கு; மெய்யடியார்களாம் கடலுக்கு (கடலைப் பொங்கச்செய்யும்) நிலவானவருக்கு; தொன்மையானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 223

(எப்போதும் சென்றுகொண்டேயிருக்கும்) காற்றின் மைந்தனை தாஸனாக உடையவருக்கு; நிலைத்த இன்பமே தன் வடிவாகக் கொண்டவருக்கு; எப்போதும் ஆத்மாவில் லயித்த இன்பம் ஒளிர்பவருக்கு; ஸத்துவத்தின் இருப்பிடமானவருக்கு / மெய்யின்பமானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 224

[8] மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விஶுத்தி, ஆக்ஞா

[9] காம க்ரோத லோப மோஹ மத மாத்ஸர்யம்

ஏழிசை ஒலிகளாம் இன்பணிபூண்டவருக்கு; ஏழிசை ஒலிகளின் முழுமையானவருக்கு; ஏழிசை ஒலிகளே இன்மொழியானவருக்கு; ஏழிசை ஒலிக்கடலானவருக்கு நமஸ்காரங்கள். 225

இன்னிசை ஒலியில் மகிழ்பவருக்கு; ஸங்கீதத்தை அடையச்செய்பவருக்கு; இசை ஒலியின் இனிமையானவருக்கு / இன்னிசைக் குரலுடையவருக்கு; இன்னிசையே ஆனவருக்கு / இனிது பாடப்பட்டவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 226

மெய்யோடொன்றுபட்டவருக்கு; மெய்யே ஆனவருக்கு; மெய்யொளியுடன் பொலிபவருக்கு; உண்மையான பேச்சுடையவருக்கு; உண்மையே வடிவானவருக்கு; உண்மையை விரும்புபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 227

ஸத்துவமானவருக்கு; ஸத்துவத்தின் உருவானவருக்கு; ஸத்துவத்தின் தத்துவத்தை ஒளிரச்செய்பவருக்கு / ஸத்துவத்தையும் தத்துவத்தையும் ஒளிரச்செய்பவருக்கு; ஸத்துவத்தின் பகைவரான அஸுரர்களை அழிப்பவருக்கு; ஸத்துவத்திற்கப்பாற்பட்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 228

எல்லாமானவருக்கு; எல்லாவற்றின் ஸாரமானவருக்கு; எல்லாமந்த்ரங்களும் தன் வடிவாகக் கொண்டவருக்கு; எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுபவருக்கு; எல்லாவற்றிலும் உயர்ந்தவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 229

ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருநாமங்கள் கொண்டவருக்கு; ஆயிரக்கணக்கான ஶ்லோகங்களில் பாடப்பட்ட பெருமை உடையவருக்கு; ஆயிரக்கணக்கான க்ருதிகளில் இருப்பவருக்கு; ஆயிரக்கணக்கான வடிவங்கள் கொண்டவருக்கு நமஸ்காரங்கள். 230

ஸாதுக்களின் உள்ளத்தை இருப்பிடமாகக்கொண்டவருக்கு; ஸாகேதபுரியில் வஸிப்பவருக்கு; தாமரைக்கண்களும் முக ஒளியும் கொண்டவருக்கு; ஸாரத்துட்ஸாரமானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 231

ஸாதுவடிவில் வனத்திலிருந்தவருக்கு; ஸால மரங்களைப் பிளந்தவருக்கு; ஸாதுக்கள், நல்லோர் இவர்களின் உயிரானவருக்கு; இன்பத்துடன் கூடியவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 232

ஸாமம் முதலான வேதங்களின் உட்பொருளானவருக்கு; ஸாமகானப்ரியருக்கு; லக்ஷ்மியின் உள்ளக்கடலைப் பொங்கச்செய்யும் நிலவானவருக்கு; லக்ஷ்மியின் மகிழ்வானவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 233

ஸித்தர்களுக்கு உகந்தவருக்கு / ஸித்தர்களை உகப்பவருக்கு; முழுநிறைவானவருக்கு; முழுமை நிறைவும் மெய்ம்மைத்துய்ப்பும் அளிப்பவருக்கு; முழுநிறைவு பெற்ற ஸத்குருத்யாகப்ரம்மத்தால் பாடப்பட்டவருக்கு; ஸித்தர்களின் இன்பமானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 234

ஸீதையின் இதயத்தாமரையை மலர்விக்கும் ஸூர்யனானவருக்கு; ஸீதையின் உளங்கவர்ந்தவருக்கு; தூயவளாகிய நற்குணங்கள் நிறைந்த ஸீதையை நல்மனைவியாகப் பெற்றவருக்கு; ஸீதாராமனுக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 235

நல்லுள்ளம் கொண்டோரின் நண்பருக்கு; அமுதப்பொழிவுபோல் மொழிபவருக்கு; இனியகுரலினால் மழைமுகிலை வென்றவருக்கு (வெல்லப்பட்ட மழைமுகில்); தேவர்களுக்கு மகிழ்வளிப்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 236

ஸூர்யவம்ஶமாகிய மலையில் விளக்கானவருக்கு; ஸூர்யசந்த்ரர்களுக்கு ஒளி அளிப்பவருக்கு; ஸூத்ரதாரியானவருக்கு; அரசருக்கு; ஸூரி என்னும் பெயர் கொண்டவருக்கு (ஶ்ரீக்ருஷ்ணர்) மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 237

ஆக்கல், அளித்தல், அழித்தல் இவற்றுக்குக் காரணமானவருக்கு; ஸேவிக்கப்பட்டவருக்கு; இத்துதிமாலை அணிந்தவருக்கு / தான் உறையும் இத்துதிமாலை அணிந்தவருக்கு; ஸேவிப்பவருக்கு இன்பம் நல்குபவருக்கு; ஸேவையில் மகிழ்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 238

ஆவலுடன் எதிர்நோக்குபவருக்கு விரும்பிய வரம் அளிப்பவருக்கு; மேலான ஆற்றலளிப்பவருக்கு; 'அவனே நான்' என்ற லயத்தில் / லயம் கொண்டவர் ஆத்மாவில் ஒன்றியவருக்கு; 'அவனே நான்' என்ற உணர்வளிப்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 239

ஸௌமித்ரியின் மிக்க அன்புடையவரும் மிக நெருங்கியவருமானவருக்கு; மின்னல் ஒளியானவருக்கு; நல்மங்கலமளிப்பவருக்கு; இனிய குணங்கொண்டவருக்கு; உமக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 240

நன்னீராடப்பட்ட கங்கையின் ஸுகமளிப்பவருக்கு; அசையா, அசையும் எல்லாவற்றுக்கும் ஆத்மாவானவருக்கு; தன்னையே பூஜிக்கும் பக்தரை ஏற்றுக்கொள்பவருக்கு / ஏற்றுக்கொள்ளப்பட்ட தன்னையே பூஜிக்கும் பக்தரை உடையவருக்கு; இன்னிசை இன்பமானவருக்கு / இன்பூட்டும் குரலுடையவருக்கு / இன்னிசையில் இன்புறுபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 241

ஸ்வரத்தின் உள்ளிருப்பவருக்கு; ஸ்வர ஒளியானவருக்கு; ஸ்வர இனிமையில் இருப்பவருக்கு / இன்னிசையால் ஸேவிக்கப்பட்டவருக்கு; ஸ்வர வெளியை ஒளியூட்டுபவருக்கு; ஸ்வர இன்பமானவருக்கு / ஸ்வரத்தில் இன்புறுபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 242

ஒளிரும் ஆயிரம் நற்றிருநாமங்கள் கொண்டவருக்கு; தன் ஒளியால் நெருப்பினை வென்றவருக்கு; தன்னிச்சையானவருக்கு; தனது மந்த்ரமாக இருப்பவருக்கு; தன்னுள் ஒன்றி இன்புறுபவருக்கு / ஸ்வரத்தில் இன்புறுபவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 243

ராமனாய் அவதரித்த ஹரிக்கு; நாராயணனான ஹரிக்கு; கோவிந்த, க்ருஷ்ணனான ஹரிக்கு; ஹரியாகிய ப்ரம்மனுக்கு நமஸ்காரங்கள். 244

மேலான பரமாத்மாவிற்கு; பரமாத்ம தத்துவத்தின் மறைபொருளானவருக்கு; மேலான இன்பப்புல்லரிப்பு உண்டுபண்ணுபவருக்கு; மேலான ஆத்ம இன்பத்தை ஒளிரச்செய்பவருக்கு; மேலான பரமாத்ம இன்பமானவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 245

இமயம் போல் அமைதியானவருக்கு; பனிகங்கையின் தோற்றுவாயானவருக்கு; இமயம் போல் ஆய்ந்தறிய முடியாதவருக்கு; இமயமாகவே உயர்ந்தவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 246

இதயத்திலின்றுதித்த இந்த கங்கையால் அபிஷிக்கப்பட்டவருக்கு; இதய ஆழத்தினின்று அர்ச்சிக்கப்பட்டவருக்கு; இவ்விதயத்தில் ஒளிரும் ஸத்துவ / இவ்விதயத்தில் ஒளிரும் ஸத்துவமே நல்மங்கல விளக்கானவருக்கு; இதயத்தில் ஸேவிக்கப்பட்டவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 247

இதயக்குகையில் நன்கு வஸிப்பவருக்கு; இதயக்குகைக்கு ஒளியூட்டுபவருக்கு; இதயத்தின் உள்ளுள்ள கடவுளானவருக்கு; இதயத்தின் மகிழ்வானவருக்கு / இவ்விதயத்தில் மகிழ்பவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 248

இதயக்கோயிலில் பூஜிக்கப்படவேண்டியவருக்கு; இதயக்கோயிலில் உறைபவருக்கு; இதயக்கோயில் விளக்கானவருக்கு; இதயமே கோயிலாகக் கொண்டவருக்கு / இவ்விதயத்தில் ஒன்றியவருக்கு; உமக்கு நமஸ்காரங்கள். 249

இதயத்திலுள்ள ஸத்குரு உருவானவருக்கு; இதயத்தாமரையால் / இவ்விதயத் தடாகத்தில் மலர்ந்த இவ்வெண்ணத்தாமரைகளால் அர்ச்சிக்கப்பட்டவருக்கு; இதயமலரின் மகிழ்வும் மணமுமானவருக்கு / இதயமலரில் மணமாய் உறைபவருக்கு; இதயத்துட்சென்றுவிட்டவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள். 250

இம்மலர்மாலையின் அழகிய வண்ணம்/பண் ஆனவருக்கு; மணமுள்ள/மகிழ்வான இம்மலர்களால் துதிக்கப்பட்டவருக்கு/ புஷ்பாவினுல் மகிழ்வுடன் துதிக்கப்பட்டவருக்கு; புஷ்பாவினுல்/இம்மலர்களால் அர்ச்சிக்கப்பட்ட தாமரைத் திருவடிகள் உடையவருக்கு; ஸீதாராமனுக்கு மங்களம். 251

பூமியின் புதல்விக்கு மங்களம்; ராமமூர்த்திக்கு மங்களம்; அன்னைக்கும் தந்தைக்கும் நல்மங்களம்; ஸீதாராமனுக்கு மங்களம். 252

ராமபத்ரனுக்கு மங்களம்; இம்மங்களமான ஶ்லோகங்களை உடைய, சிறப்புடையவருக்கு/ இம்மங்களமான ஶ்லோகங்களின் சிறப்பானவருக்கு; மங்களமான லக்ஷ்மி உறையும் ஶ்ரீநிவாஸருக்கு; ஸீதாராமனுக்கு மங்களம். 253

பூமியின் புதல்வியின் நாயகருக்கு மங்களம்; பூமியை நன்கு பாலிப்பவருக்கு மங்களம்; திவ்யமான கங்கை யாரிடமிருந்து பாய்கிருளோ, அந்த மஹாவிஷ்ணுவிற்கு ஶுபமங்களம். 254

ஆத்மாவில் ஒன்றிய ஸீதாராமனுக்கு / ஸீதாராமனில் ஆத்மா ஒன்றியவருக்கு; இம்மலர்மாலையில் மகிழ்பவருக்கு; த்யாகப்ரம்ம குருஸ்வாமியின் திருவடிமலர்கட்கு மங்களம். 255

ஶ்ரீராமநாமத்தின் நற்சிறப்பைக்கொண்ட நற்புகழான அக்ஷரமாலை; இந்நாமமலர்களால் அர்ச்சனைசெய்யக் கிடைப்பது நல்மகிழ்வமைதியும் நற்சிறப்பும் நல்மங்களமும் ஆகும். 256

ஓம்

மங்களம்

ஸ்ரீராமஜயம்

ஸ்ரீராம மங்களாஷ்டகம்

ஸங்கீதத்தின் உயிரும் வித்துமானவருக்கு; ஸப்தஸ்வரங்களில் உறைபவருக்கு; ஷட்ஜத்தை ஆதாரமாகக்கொண்ட ஶ்ருதியில் இருப்பவருக்கு; ஸத்குரு தானே ஆனவருக்கு / ஸத்குருவான விஷ்ணுவிற்கு மங்களம். 1

ரிஷபாரூடரான ஶிவனால் துதிக்கப்பட்டவருக்கு; பகைவரை அழிக்கும் சிறப்புடையவருக்கு; ரிஷிஶ்ரேஷ்டரான த்யாகப்ரம்மத்தால் பாடப்பட்டவருக்கு; பகைவரை அச்சங்கொள்ளச் செய்பவருக்கு மங்களம். 2

புனித கங்கைகொண்ட திருவடி உடையவருக்கு; ஆழ்ந்த இனிய குரலில் மொழிபவருக்கு; காந்தர்வ இசையில்/காந்தர்வரான த்யாகப்ரம்மத்தின் இசையில் மகிழ்பவருக்கு; ஆய்ந்தறிய முடியாதவருக்கு நல்மங்களம். 3

நிலமகள் கேள்வனுக்கு மங்களம்; மங்கள இன்ப வடிவினருக்கு; மங்களமான திருமகளின் உறைவிடமானவருக்கு; மாதவனுக்கு நல்மங்களம். 4

இனிய குரலில் பாடப்பட வேண்டியவருக்கு; நிறைந்த ஸ்வரக்கடல் ஆனவருக்கு; கடல் வண்ணத்தில் நடம் புரிபவருக்கு / கடலில் பண்ணிசை நடம் புரிபவருக்கு; மேலான பரம்பொருள் ஆனவருக்கு / மேலான பொருள் அளிப்பவருக்கு நல்மங்களம். 5

மங்களமருள்பவருக்கு; தர்மத்தைக் காப்பவருக்கு; திறமையும் தைர்யமும் அளிப்பவருக்கு; த்யானிக்கப்பட்டவருக்கு; த்யானத்தால் அடையப்பட வேண்டியவருக்கு; த்யானிக்கப்பட்ட உருவானவருக்கு மங்களம். 6

வேடனாகிய குஹனுக்கு நண்பரானவருக்கு; இரவில் ஸஞ்சரிக்கும் அஸுரர்களின் திமிரை அடக்கியவருக்கு; வீட்டுப்பேறளிப்பவருக்கு; நிலைத்த இன்பத்தை அருள்பவருக்கு மங்களம். 7

ஸப்தஸ்வரங்களில் இருக்கும் மேலான கடவுளானவருக்கு; பாடப்பட்ட க்ருதிகளில் இருப்பவருக்கு; ஸத்குருஸ்வாமியால் பாடப்பட்டவருக்கு; ஸீதாராமனுக்கு மங்களம். 8

ஓம்

மங்களம்

ஸ்ரீராமஜயம்

குருவந்தனம்

ஸ்ரீத்யாகராஜருக்கு நமஸ்காரங்கள்; மெய்யறிவு ஒளிக்கு நமஸ்காரங்கள்; ஸ்ரீராமபக்தருக்கு நமஸ்காரங்கள்; ஆசார்யருக்கு அனேக நமஸ்காரங்கள். 1

நாதாவதாரமானவருக்கு, பூஜிக்கப்படவேண்டியவருக்கு; நாதோபாஸன வழிகாட்டுபவருக்கு; பரப்ரம்மமான ஸ்ரீராமனை நாதத்தால் அர்ச்சித்தவருக்கு அனேக நமஸ்காரங்கள். 2

தாரகநல்மந்த்ரத்தை நூறுகோடி ஜபித்த நற்கீர்த்தி உடையவருக்கு; ஸ்ரீராமபத்ரனின் தாரகத்திருநாமத்தின் இன்பமே வடிவானவருக்கு; 3

யாகத்தைக்காக்கும் ஸ்ரீராமனின் தர்ஶனத்தில் பரவஶப் பேரின்ப வடிவானவருக்கு; கங்காப்ரவாஹமான வாக்குப்பொழிவினால் ஸ்ரீராமமூர்த்தியை அபிஷேகித்தவருக்கு; 4

பண்ணிசை அருவியான இனிய நற்கீர்த்தன இன்பத்தில் உருகும் குரலுடையவருக்கு; செய்யுளணிகள் ஒளிரும் கம்பீர நடையில் பாடியவருக்கு; 5

பல்லாயிரகணக்கான நற்கீர்தனங்களால் ஸ்ரீராமனும் பேரொளியைப் பாடியவருக்கு; இனிய திவ்யநாமஸங்கீர்த்தனங்களில் பளிச்சிடும் லயத்துடன் ஆடியவருக்கு; 6

ராகம், தாளம் ஒப்வமைதி நடமிடும் க்ருதிகளை வெள்ளமாய்ப் பெருக்கியவருக்கு; ராமபக்தியெனும் அமுதவெள்ளத்தில் திளைத்த ஸ்வானுபவத்தில் ஒளிர்பவருக்கு; 7

பண், இறையன்பு, மெய்யறிவு இவற்றைச் சுருங்க விளக்கும் க்ருதிகளைக் கற்பித்தவருக்கு; திருநாமங்களைப் பாடுதலில் பேரரசரானவருக்கு; ஸத்பக்திரஸமாய் பாடியவருக்கு; 8

நாதயோகத்தில் நன்கு ஒன்றியவருக்கு; த்யானயோகத்தில் ஸமாதியில் ஆழ்ந்தவருக்கு; பக்தியோகத்தில் மிகச்சிறந்தவருக்கு; ஞானயோகத்தின் முழுமையானவருக்கு; 9

வேதோபநிஷத்பொழிவான க்ருதிகங்கை வெள்ளமானவருக்கு; வேதவேதாந்த மெய்ப்பொருளினை போதிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரங்கள். 10

தேனினிது இசைத்தவருக்கு; இந்நாமமலர்களால் அர்சிக்கப்பட்டவருக்கு; இம்மலர்மாலையின் நல்வண்ணமானவருக்கு / புஷ்பாவளியின் இன்னிசையானவருக்கு; த்யாகராஜருக்கு மங்களம். 11

ஓம்

மங்களம்

ஸ்ரீராமஜயம்

குருஸ்துதிப்ரமாணிகா

இனிய நாதத்தினால் ராமனைப் பூஜித்தவரை; இனிய பாட்டுக்களினால் எல்லோரையும் மகிழ்வித்தவரை; பக்தியுடன் இனிய பண்ணிசையால் வணங்கப்பட்டவரை; இவ்வினிய பாட்டினால் அடையப்பட்டவரை; குருவை; 1

இனிது ராமநாமத்தினைப் பாடியவரை; திருநாமங்களைப் பாடுதலில் தலைசிறந்தவரை; யோகஸமாதியில் நிலைத்துள்ளவரை; தன்னில் ஒன்றிய திருநாம இன்பத்தினை எப்போதும் உடையவரை; 2

கங்கையேயென இனிய பாட்டுக்கள் பொழிந்தவரை; தாரகநாமத்தினை இனிது பாடியவரை; மிக இனிய இசைக்குரல் படைத்தவரை; ஶ்ருதியோடிணைந்த பாட்டின்பம் கொண்டவரை; 3

லய அமைதிகொண்ட கீர்த்தனங்கள் செய்தவரை; ராகத்தின் ஸாரமாய் அமிழ்தினைப் பொழிந்தவரை; நல்லினிய தாரகநாமத்தை நன்கு ஜபித்தவரை; ஸ்ரீராமனின் தோற்றத்தை நேரில் கண்டவரை; 4

இனிய நாதமே ஒளிமிகு வடிவானவரை; நாதமெய்யின்பத்தைத் தன்னுள் கொண்டவரை; ஸ்ரீராமனின் மகிழ்வில் எப்பொழுதும் லயித்திருப்பவரை; எப்பொழுதும் இறைமையை உணர்ந்தவரை; 5

தாமரைக்கரத்தில் ஜல்லகம் கொண்டவரை; (தாளத்திற்கேற்ப) நடமிடும் திருவடித்தாமரைகள் கொண்டவரை; ஶ்ருதிலயத்தைத் தன்னியல்பாகக் கொண்டவரை; உணர்ச்சியுள்ள கீர்த்தனங்களை நன்கு பாடியவரை; 6

மெய்ப்பொருள் தத்துவத்தைத் தெளிவுறுத்துபவரை; அகந்தையை அழிப்பவரை; உள்ளொன்றிடச்செய்பவரை; இவ்வுள்ளத்தில் ஒன்றிய ஸத்குருவை; இவ்வுருகிய உள்ளத்தால் அர்ச்சிக்கப்பட்டவரை; 7

இவ்வுள்ளத்தில் காட்சியளிக்கும் தெய்வத்தை; இவ்வுள்ளத்தில் தெளிவுறு வடிவானவரை; இவ்வுள்ளத்தில் மலர்ந்த எண்ணமலர்களால் அர்ச்சிக்கப்பட்டவரை; இவ்வெண்ணங்களின் உணர்ச்சிச்செறிவில் மகிழ்வுறுபவரை; 8

தன்னியல்பான இவ்வெண்ணங்கள் அர்ப்பிக்கப்பட்டவரை; (இவற்றின்) வண்ணப்பண்ணிலும் இயல்பிலும் மகிழ்வுறுபவரை; தனது ராகரத்னமாலைகள் கொண்டவரை; தனது ஶிஷ்யையின் இம்மலர்மாலைகள் அணிந்தவரை; 9

தனது நற்றிருவடிகளை அடைந்த இப்புதல்விக்கு அடைக்கலமானவரை; தனது திருவடிகளை அடைந்த இப்புதல்வியை நன்கு காப்பவரை; நல்மங்களத்திற்கு இருப்பிடமானவரை; ஒளிபொருந்தியவரை; குருவை; எப்போதும் துதிக்கிறேன். 10

இந்த குருஸ்துதிப்ப்ரமாணிகா குருவினால் தூண்டப்பட்ட சொற்கள் கொண்டது; பெரும் மகிழ்வினை அளிப்பது; குருவருள் மங்களம் நல்குவது. 11

ஓம்

மங்களம்

ஸத்குரு ஸ்ரீத்யாகப்ரம்ம புஜங்கப்ரயாத ஸ்தோத்ரம்

யதி த்யாகராஜேந்த்ரரால் நன்கு பாடப்பட்ட பாட்டுக்களுடையவரை; எப்பொழுதும் அவரால் பக்தியுடன் துதிக்கப்பட்ட ராமனே; தனது மேலான நற்புகழைப் பாடும் கீர்த்தனை வெள்ளம் கொண்டவரை; ராமசந்த்ரனை; மங்களத்துடன் கூடியவரை, எப்பொழுதும் துதிக்கிறேன். 1

ஸ்ரீத்யாகராஜரைத் துதிக்கிறேன்; யதீந்த்ரரைத் துதிக்கிறேன்; ஸ்ரீராமசந்த்ரனின் தனிச்சிறப்பு வாய்ந்த பக்தராய் முன்னோடியாய் உள்ளவரைத் துதிக்கிறேன்; நாத அரசரைத் துதிக்கிறேன்; மேலான இன்பமும் வீட்டுப்பேறும் அடையச்செய்பவரை, மங்களம் செய்பவரைத் துதிக்கிறேன்; ஸத்குருவைத் துதிக்கிறேன். 2

பரப்ரம்மனைக் குணங்களுடை உருவாய்ப் பாடியவரை; பரப்ரம்மனின் குணங்களற்ற தன்மையை அறியச்செய்பவரை; பரப்ரம்மத்தில் ஒன்றியவரை; மேலான ஆத்மாவாக உணரப்பட்டவரை; பரப்ரம்ம வடிவானவரை; குருவைத் துதிக்கிறேன். 3

பரப்ரம்மனை நாதத்தால் நன்கு பூஜித்தவரை; நல்லொளி கொண்டவரை; மேலான செல்வமாய் ஸங்கீத யோகத்தைப் புகழ்ந்தவரை; இனிய நாதத்தினுல் பேரின்ப ஒளிவடிவை அர்ச்சித்தவரை; இனிய நாதமே தன்வடிவாகக் கொண்டவரை; ப்ரம்மவடிவான குருவைத் துதிக்கிறேன். 4

இனிய ராகமும் ஸ்வரமும் ஒலிக்கும் ஸங்கீத வடிவானவரை; அமுதச்சாருக/அமுதப்பொழிவாக ஸப்தஸ்வரங்கள் எழில் நடம்புரிய கானம் செய்பவரை; நல்லினிய குரலால் ராமனே அழைத்தவரை; குருத்யாகராஜரை அன்புடன் துதிக்கிறேன். 5

பாதத்தாமரைகளில் சலங்கைகள் ஒலிக்க இனிது கானம் செய்பவரை; கரகமலங்களில் ஏழுதாளங்கள் விதவிதமாக ஒலிப்பவரை; இனிதொலிக்கும் தம்புரா நாதத்துடன் ஒன்றிய குரலுடையவரை; கணீரெனும் மணியின் இன்னொலியுடன் நாதத்தைப் பொழிபவரை; 6

ஸதா அனுஸ்வரங்களின் 'ஹ்ரீம்'கார ஒலி செவிகளில் ஒன்றியவரை; ஸதா ஆத்மானுபவ வெள்ளத்தில் அமிழ்ந்துள்ளவரை; ஸதா நாம ஸங்கீர்த்தனம் எனும் பேரின்பயோகத்தில் ஒன்றியவரை; ஸத்குருத்யாகராஜரை எப்போதும் துதிக்கிறேன். 7

ஸதா ராம, ராம என்று திருநாமத்தினைப் பாடியவரை; ஸதா திருநாம மெய்யமுதினைப் பருகி மகிழ்பவரை; ஸதா ராகத்திலும் தாளத்திலும் ஒன்றிய சிறப்புடையவரை; என்னில் ஆத்ம விழிப்புணர்ச்சியைத் தூண்டியவரை; அவரை எப்போதும் துதிக்கிறேன். 8

மங்களத்திருமுகத்தில் மெய்யறிவொளி வீசுபவரை; ஒளி பொருந்திய அழகிய கருணை விழிகளால் அமைதியூட்டுபவரை; இனிய வார்த்தைகளால் இனிய ராமனைத் தழுவியவரை; என்னைக் கைதூக்கி விடுபவரை; அந்த ஸத்குருவை நமஸ்கரிக்கிறேன். 9

இன்பப்பூங்காவான, அன்னை லக்ஷ்மியின் இன்பமான திருநாமத்தினை ஜபிக்கப்பட வேண்டியதாகக் கொண்டவரை; கோடிக்கணக்கில் ஜபிக்கப்பட்ட ஈஶன் திருநாம ஒளி இலங்கும் திருநாவு கொண்டவரை; மார்பில் ஒளிவீசும் ஶ்ரீராமனின் எழிலொளிர் திருவுருவம் கொண்டவரை; ஹரியை ஸ்மரிப்பவரை; அந்த ஸத்குருவை துதிக்கிறேன். 10

பாதத்தினைத் தழுவிக்கொண்ட இந்த பக்தைக்குக் காப்பளிப்பவரை; மிகச்சிறந்தவரை; தன்னை ஶரணடைந்த இந்த பக்தையைக் கைதூக்கி வழிநடத்தி உபதேஶம் செய்பவரை; தனது இன்குரலோடிணைந்த இன்னிசைக் கலையினைப் பயிற்றுபவரை; எனது புகலிடமான ஸத்குருவை, அவரை ஶரணடைகிறேன். 11

இனிய இன்பமான ஸப்தஸ்வர வித்தையின் அதிதெய்வமானவரை; முழுமுதற் கடவுளானவரை; இனிய ப்ராஸங்களும் அனுப்ராஸங்களும்

(எதுகை, மோனை போன்ற செய்யுளணிகள்) ஒளிர் காவ்யமெனக்ருதிகள் செய்தவரை; காவ்ய எழிலும் உள்ளுயிர்ப்பும் ஸத்பக்தியும் கொண்ட க்ருதிவெள்ளங்கள் செய்தவரை; ஸங்கீதத்துடன் ஒளிர்பவரை / விஷ்ணுவைப் பாடுவதில் மன்னரானவரை; குருவைத் துதிக்கிறேன். 12

ஸதா ஶ்ரீராமனின் மெய்த்யானதிலும் ஸங்கீதத்திலும் / மெய்ப்பொருள் மகிழ்வுத்தோட்டமான ஶ்ரீராமனின் த்யானத்திலும் ஸங்கீதத்திலும் ஈடுபட்டு மகிழ்பவரை; ஸமாதியில் ஒன்றிய ஸங்கீத வாக்கேயகாரரை; மிகவும் புண்யமான கங்கையே பொழியும் வாக்குடையவரை; பெரியவரை; குருவை நான் எப்போதும் துதிக்கிறேன். 13

சிறந்த த்யானகங்கையில் மங்கல நீராடும் பாக்யம் கொண்டவரை; க்ருதிகளில் ப்ரவஹிக்கும் மெய்யின் ஸாரமும் ஸங்கீத இன்பமும் கொண்டவரை; அமுதப்பெருக்கான ஸத்கீர்தனங்களாகிய பாட்டுத்தொகுப்புகள் செய்தவரை; எனது ஆசார்யராகிய பெரியவரை, அவரைத் துதிக்கிறேன். 14

இனிய ஸங்கீத ஸாம்ராஜ்யத்தை ஒருகுடை நீழலில் ஆட்சிபுரிபவரை; ஒளிரும் ராமசந்த்ரனை, இனியவனை, தனக்கு நெருங்கியவனைப் பாடியவரை; புல்லரித்து மயிர்க்கூச்சுடன் பேரின்பத்திலொன்றிப் பாடியவரை; ஸத்குரு த்யாகராஜரை உணர்ச்சியுடன் துதிக்கிறேன். 15

திருமகள் மகிழ்வான, மங்கலமளித்துக் காப்பாற்றும் தாரக மந்த்ரத்தை ஒலித்தவரை; வேதப்பொருட்ஸாரம் ஒளிரும் கீர்த்தனைகளைப் பொழிந்தவரை; நன்மையைத் தூண்டும் உபதேஶங்கள் செய்தவரை; ஸத்குரு த்யாகராஜரை எப்போதும் துதிக்கிறேன். 16

மேலான இன்பத்தைக் கொடுப்பதும் திருமகளின் மகிழ்வுமான மந்த்ரத்தை உபதேஶிப்பவரை; எப்பொழுதும் இன்பமளிக்கும் ஸங்கீதத்தின் தத்துவத்தை உபதேஶிப்பவரை; தெய்வீகமான, இன்பமளிக்கும் கங்கையே இனிய கானமாகப் பொழிபவரை; மேலான இன்பத்தின் மூலமான அந்த குருவைத் துதிக்கிறேன். 17

பிறவித்துயரைப் போக்கும் ஸங்கீத கங்கை வெள்ளமாய்ப் பெருக்கிடுபவரை; நல்மங்களமும் ஸங்கீத ஸித்தியும் அருள்பவரை; என்றுமிருக்கும் நற்கீர்த்தனங்களில் ஒளிரும் உருவுடையவரை; எனது சிறந்த ஆசார்யரை எப்பொதும் நான் துதிக்கிறேன். 18

அறிவொளியும் மெய்ஞானமும் கொண்ட ஸங்கீதத்தை போதிப்பவரை; தாள, ஸ்வர இன்பத்துடன் கூடி கம்பீரமாக ராகமிசைப்பவரை; எழிலினிமை கொண்ட கம்பீர க்ருதி நடையுடயவரை; அறிவுவெளி விளக்கானவரை; அந்த ஸத்குருவைத் துதிக்கிறேன். 19

என்றும் தூய மெய்யுருவ ஒளியானவரை; தமோகுணமாகிய தூக்கத்தின் பகைவனான ஸூர்யனின் ஒளிகொண்டவரை; ராஜஸ, தாமஸ குணங்களைப் போக்கிடும் ஸத்துவ ஒளியானவரை; என்னுள் ஒளியானவரை; அந்த ஸத்குருவைத் துதிக்கிறேன். 20

பாம்பின்மேல் ஒளிர்பவனைப் புலரியில் பாடியவரை; பாம்பணைமேல் பள்ளிகொண்டவனை, அமைதிகொண்டவனை, இனிது பாடியவரை; புஜங்கப்ரயாதம் எனும் நடையில் அமைந்த இத்துதிகளின் நாதனானவரை; ஸத்குரு த்யாகராஜரைத் துதித்து வணங்குகிறேன். 21

புஜங்கப்ரயாதத்தில் பாடப்பட்ட இத்துதியில் மிகவும் மகிழ்வுறுபவரை; புஜங்கப்ரயாதத்தில் தனது நற்சிறப்பைத் தானே பாடியவரை; புஜங்கப்ரயாதத்தில் இத்துதிபாடும் இவளுடன் ஒன்றியவரை; எனக்குள் நன்கொன்றிய குருதேவரைத் துதிக்கிறேன். 22

குருத்யாகராஜேந்த்ரரிடத்து பக்தியால் பாடப்பட்டவை; சிறந்த இன்பமளிக்கும் ஸங்கீத ஸந்நிதியில் அர்ப்பணிக்கப்பட்டவை; நல்மலர்களால் செயும் பூஜையானவை; உண்மையான பூஜையானவை; குருவின் திருவடிக்கமலங்களில் ஸமர்ப்பிக்கப்படுபவை; மிக்க மங்களம் நல்குபவை. 23

குருத்யாகராஜரெனும் காந்தர்வருக்கு நல்மங்களம்; இன்னிசைக் கடலைப் பொங்கச்செய்யும் முழு நிலவானவருக்கு நல்மங்களம்; கான

கங்காப்ரவாஹம் கொண்டவருக்கு, தூய பரம்பொருளானவருக்கு நல்மங்களம்; நல்மங்கலமளிப்பவருக்கு நல்மங்களம்; நல்மங்களம். 24

ஓம்

மங்களம்

ஸ்ரீராமஜயம்

ஸத்குரு ஸ்ரீத்யாகப்ரம்ம ஶரணாகதி ஸ்தோத்ரம்

ஸ்வரராகஸுதாரஸ – இன்னிசை ஒலியும் பண்ணுமாகிய அமுதச்சாறே – புனிதத் திருமேனியாகக்கொண்ட; மனிதர்களிற் சிறந்த(வராய் அவதரித்த); ஸத்க்ருதிகள் செய்த குருவாகிய; கவிதை ஆற்றலும் இனிமை, எழில், பக்தி இவை அனைத்தும் ஒருங்கிணைந்த க்ருதிகளைச்செய்த குருதேவ! தங்கள் திருவடிகளைச் ஶரணடைகிறேன். 1

நடமிடும் ஸ்வர தேவதையின் திவ்யக் காட்சியான/திவ்யக் காட்சி அளிக்கும்; ஸ, ரி, க, ம, ப, த, நி எனும் ஏழு ஸ்வரங்கள் அருவியாய்ப் பொழியும் கானம் படைத்த; ஸகலார்த்தங்களையும் கொடுக்கும் பரமனின் திருநாமத்தில் லயித்த உள்ளத்தினின்றுதித்த பாட்டமுதைப்பொழிந்த / திருநாமங்களைத் தாமரைமலர் மாலையெனக் கோத்த; குருதேவ! தங்கள் சரணங்களை ஶரணடைகிறேன். 2

ஶிவனை மகிழ்விக்கும் திருநாமக்கடலான; சிறந்த ரிஷியான; எனக்குப்ரியமான ஸத்துவ குருவான; பகைவரை அழிப்பவனை வெல்லும் நாதக்கடலான; குருபுங்கவ! தங்கள் நற்றிருவடிகளை ஶரணடைகிறேன். 3

விண்ணிலிருந்து வந்திட்ட தேவ! இன்னிசை இறைவ! விண்ணினின்றிழிந்திட்ட புண்ய கங்கையே ஆன மங்கலக்ருதிகள் செய்த; மலையரசனும் இமயத்தின் புதல்வியான கங்கை இன்னொலியுடன் பாய்ந்திடும் பாட்டிசைத்த; குருதேவ! தங்கள் திருவடிகளே ஶரணம். 4

'நான்', 'எனது' எனும் அஹங்கார மமகாரங்களை இல்லையென்றுக்குபவர்; புகழப்பட்ட இமயமே ஆன குரு; எனக்கு ஶ்ருதியோடிணைந்த இன்னிசையையும் நல்லறிவையும் போதித்து நற்கதியளிக்கும் குரு; எனது குற்றங்களைக் களைந்து காத்திடும் குரு; எனது தெய்வமே! தங்களது நற்றிருவடிகளே ஶரணம். 5

எனது உள்ளத்தில் வெள்ளிமயமாய் ஒளிரும் புண்ய ஹிமாலயமான; எனது வாக்கில் ப்ரவஹித்து இசைபாடும் கங்கைப் பெருக்கான; எனது உள்ளத்தில் ஒன்றிய இனிய நாதம் படைக்கும் குருவான; எனக்கு எல்லாமேயான தங்கள் திருவடிகளே ஶரணம். 6

மேலான பஞ்சநத க்ஷேத்ரத்திலுதித்த நாதநதி; மேலானராமனெனும் கடலில் கலந்திடும் கானம் செய்த; மேலான இனிய இசையில் ராமனும் ஹரியை பூஜித்த; குருதேவ! தங்கள் திருவடிகள் ஶரணம். 7

செல்வமாகிய தாஶரதியைத் துதித்த கான அமுது படைத்த; பூமியின் புதல்வியின் நாயகனுன ஸ்ரீராமன் மேல் அன்புக்கடலான; பூமியில் ஸஞ்சரித்த நாதக்கடவுளான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 8

துன்பத்தைப் போக்கும், இனிதொலிக்கும் பண்ணருவியே! வழியற்ற என்னைக் கடைத்தேற்றுதல் நிந்தன் மகிழ்வாகும்; வேதாகம ஶாஸ்த்ரங்களைக் கொண்ட நற்கீர்த்தனைக்கடலே! குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 9

ஸகுணமாய் அர்ச்சிக்கப்பட்ட நிர்குணஸ்வரூபத்தை அறிந்த ஞானியே! இன்னிசை ஒலிக்கடலின் கரைகண்ட நாத ஒளியே! ஹரிபக்தியுடன் இணைந்து வியனுறு கவிதை ஆற்றல் அளிப்பவரே! குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 10

தாஶரதி எனும் ஹரி மகிழ்ந்திட்ட கானக்கடலே! ஹரிதாஸர்களின் தாஸன் நான் எனும் உணர்வுடன் இணைந்தவரே! ஹரியைக் கவர்ந்திடும் மிக நல்ல கணக்கற்ற க்ருதிகள் செய்தவரே! குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 11

இனிய நாத அமுதாய் ஹரிநாமத்தை இனிதிசைத்த; ஹரி, க்ருஷ்ண என இனிய நாம அமுதில் திளைத்த; ஹரி, கேஶவ, மாதவ என இசை பொழிந்த முகிலான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 12

தேவர்கள் வணங்கும் அவனை நனைக்கும் பக்திச் சாற்றினைப் பொழிந்த; கடவுளான ராமனின் திருநாமத்தை அமுத கானமாய் இசைத்த; சிறந்த

ராகத்தையும் லயத்தையும் அறிந்த; அமுதினிய பேச்சுடைய குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 13

பாதத்தில் ஒலிக்கும் சலங்கை நாதத்தோடிணைந்த கரதாளத்தின் லயத்தோடொன்றி நடமிடும் குருதேவ! குரல் ஒன்றிய இனிய தம்புராவின் நாதத்தில் மகிழ்ந்த; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 14

பகவத் குண கானமிசைத்து ஸமாதியில் ஒன்றிய; மங்களம் அளிக்கும் காயகரான; பக்திக்கடலே! செல்வத்தைத் துச்சமாகக் கருதி அன்புக்குரிய ராமனையே செல்வமாக மதித்த குருவரசரே! தங்கள் திருவடி ஶரணம். 15

ரகுராமனில் மகிழ்ந்து நிலைத்த எண்ணங்களுடைய; தொடர்ச்சியாய் லக்ஷ்மியின் மகிழ்வானவனில் மகிழும் எண்ணமுடைய; இனிய ராமனின் இனிய நாமமாம் நல்மந்த்ரத்தை ஜபித்த; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 16

மானிட வடிவில் ராமனெனும் ஒளியை நன்கு கண்ட; சிறந்த பாட்டுக்களை மழையாய்ப் பொழியும் நாதமுகிலான; பரம்பொருளைக் கண்ட புல்லரிப்புடன் கூடிய புனிதரான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 17

பிறவிக்கடலைக் கடக்கச்செய்யும் தாரகமந்த்ரத்தை உபதேஶிக்கும் குருவே! ஶிவன் த்யானிக்கும் ஶ்ரீராமன் தோன்றும் இசைக்கடலான; பிறவிப் பிணிக்கு மருத்துவம் செய்யும் ஶ்ரீராமனுக்கு நிவேதனமான திவ்யமான நல் க்ருதிகள் செய்த; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 18

சிறந்த இன்னிசை ஒலியிலும் பண்ணிலும் ஒன்றி திருமாலை அர்ச்சித்த; சிறந்த பண்ணிசை அமுதச்சாற்றினைப் பருகி மகிழ்ந்த; பரம்பொருளான ராமனின் திருநாமத்தை இனிது பாடும் இன்பம் கொண்ட; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 19

ரகுபுங்கவனைப் பாடுவதில் ஓங்கி உயர்ந்த குரலுடைய / உயர்ந்த இமய-மலையான; ரகுநாதனைப் பாடும் இனிய நாதத்தில் வானுலக கங்கையான;

ரகுகுல அரசனைப் பாடும் நற்கிர்த்தனைகளிற் சிறந்த அரசரான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 20

என் வாழ்விற்குயிரூட்டும் ஜீவ நதியான கங்கையே ஆன; சிறந்த தங்கள் ஸத்க்ருதிகளில் திளைத்தலில் அமைதியருளும் குருவே! சிறந்த ராகதாளத்தில் ஒன்றிய கீர்த்தனங்களைப் பொழியும் முகிலான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 21

சிறந்த சொற் பொருட்செறிவின் எழில் நடம் இசைத்திறனுடனும் பக்தியுடனும் இணைந்து பெருக்கெடுத்தோடச் செய்திடும்; ரகுநாயகனைப் பாடிடும் திவ்ய இசைஞரான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 22

சிறப்புடை விஷ்ணுவின் திருவடிகளினின்று ஒலித்துக்கொண்டோடும் - சொற்சிறப்பும் இனிய இசையொலியும் திருநாம இன்பமுமான - அலகாநந்தாவும்; சிறந்த ஶிவனின் சடைமுடியினின்று பகிரதனின் விடாமுயற்சியின் பலனாக ஒலித்துக்கொண்டோடும் பாகீரதியும் கலந்த கங்கையாம் இனிய கானப்பொழிவே! எனக்குக்காப்பருள்க! 23

மிகவும் தூய நல்வாக்கினால் ஹரியை அபிஷேகித்த; வாக்குத்திறனே அற்ற இந்த ஶிஷ்யையின் நல்வாக்கினால் அபிஷேகிக்கப்பட்ட குருவே! குருபக்தி ஒன்றே துணையாக, வேறெந்த உதவியும் இன்றித் துதிக்கப்பட்ட குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 24

வேறு கதியில்லாமல் தங்களையே ஶரணடைந்த இந்த ஶிஷ்யையை வழிநடத்துபவரே; ஸ்வர ராகங்களின் ரஹஸ்யங்களையும் லயத்தையும் அறியச் செய்பவரே; வாக்குத்திறனே அற்ற இவளுக்கு நல்வாக்கும் இன்குரலும் அருள்பவரே! குருதேவ! தங்கள் திருவடி ஶரணம் . 25

(இந்த)இதயத்துட்சென்ற நற்க்ருதிகளில் தத்துவத்தைப் பொழிந்த; (இந்த)இதயத்துட்புகுந்த, மிகவும் மதிக்கத்தக்க ஸத்துவமே ஆன குருவே! (இந்த)இதயகமலத்தில் எப்போதும் த்யானிக்கப்பட்ட குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 26

இதயக்கோயிலில் விக்ரஹமாக ராமனைத் துதித்த; இவ்விதயக்கோயிலில் விக்ரஹவடிவில் துதிக்கப்பட்ட; இவ்விதயமலையில் பாய்ந்தோடும் இசைநதியான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 27

இவ்விதயக்கோயிலில் வஸித்தலில் எப்போதும் மகிழ்பவரே! இவ்விதயக்கோயிலை மணமூட்டும் மலரின் தேனை; இவ்விதயக்கோயிலின் அர்ச்சனைத் துதிமலர்களுடன் கூடிய திருவடியுடைய; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 28

இன்பம், அமைதி, நல்மங்களம், என்றும் நிலைத்த தன்மை இவற்றை வரமாக அருள்பவர்; பிறவிப் பெருங்கடலைக் கடக்கச் செய்யும் தாரகநாமத்தை இனிது கானம் செய்வதிற் சிறந்தவர்; நீண்ட வாழ்வும், நோயற்ற தன்மையும், திவ்ய நோக்கும் அருள்பவர்; குருவின் மங்கள நற்றிருவடிகளே ஶரணம். 29

மிகச்சிறந்த நல்மங்களம் அருளும் குருவான; நல்மங்களம் அருளும் பூஜிக்கப்பட்ட திருவடிகளுடைய; நிலைத்த மங்களம் செய்திடும் இன்னிசை குருவே! தங்கள் மங்களத் திருவடிகளே ஶரணம். 30

ஓம்

மங்களம்

ஶ்ரீராமஜயம்

ஶ்ரீத்யாகப்ரம்ம குரு அஷ்டகம்

குரு(தேவர்) ராமனிடம் நல்பக்தியுடனிணைந்த கானக்கடலானவர்; குரு த்யாகத்துடனிணைந்த இறைவன் நாமக்கடலானவர்; குரு தன் ஒளியினால் கணக்கற்ற ஸூர்யர்களை வென்றவர் (வெல்லப்பட்ட கணக்கற்ற ஸூர்யர்கள்); குருவே எனது அடைக்கலமான, தத்துவச் செல்வத்தின் இருப்பிடம். 1

குரு கத்யம், பத்யம் (உரைநடை, நற்செய்யுள்) இவற்றால் துதிக்கப்பட்ட ஆஶுகவி; குருவின் திவ்யநாமகீர்த்தனங்கள் திவ்ய கங்கையே ஆனவை; குருவின் நற்க்ருதிகள், கீர்த்தனங்கள் புத்தெழில் நிரம்பியவை; குருவே என் அடைக்கலமான, ஸத்துவச் செல்வத்தின் இருப்பிடம். 2

குருவின் பேச்சும் பாட்டும் இன்சொற்கள் கொண்டவை; குரு இன்குரல் கொண்டவர்; தன் இதயத்துட்புகுந்த இறைவனின் திருநாமத்தை ஜபம் செய்தவர்; குரு இறைவனை உண்மையுடன் வழிபட்டவர்; பக்தியில் இருப்பவர்; குருவே என் அடைக்கலமான, உண்மைச் செல்வத்தின் இருப்பிடம். 3

குரு பஞ்சநதத்தில் தன் அன்பனை ராமனைப் / பஞ்சநத ஈஶனுக்குகந்த ராமநாமத்தைப் பாடி இன்புற்றவர்; குரு வேண்டுவன அனைத்தும் அளிக்கும் ராமனை நல்லுள்ளத்தில் கொண்டவர்; குரு எளிதில் காவ்யம் படைக்கும், ரஸனை மிக்கவர்; குருவே என் அடைக்கலமான, நித்ய நிதியானவர். 4

குரு தனது பாட்டுகளினால் ஶ்ரீராமனும் ஹரியை அழகிய சிற்பங்களாய் வடித்தவர்; குரு தனது கீர்த்தனைகளாம் கோயிலில் விஷ்ணுவைப் பூஜித்தவர்; குருவின் நாதத்திலும் லயத்திலும் கோயில்கொண்டிருப்பவர்; ஒளிமயமானவிஷ்ணு; குருவே எனது அடைக்கலமான, நாதச் செல்வத்தின் இருப்பிடம். 5

குரு பாமரர்களிடமிருந்து வெகுதூரத்திலுள்ள, இனிய நாதத்தில் இமயமானவர்; குரு பாமரர்களுக்கும் போதிக்கும் வகையில் நற்கீர்த்தனங்கள் அருளியவர்; குரு உள்ளத்தைத் தூய்மையாக்கும் திருநாமத்தை இனிது இசைத்தவர்; குருவே எனது அடைக்கலமான, அறிவுச் செல்வத்திற்கிருப்பிடம். 6

குருவின் தூய்மையளிக்கும் பாட்டுக்கள் தேவநதியான கங்கையின் இன்பமளிப்பவை; குருவின் தூய பாட்டு விண்ணுலக இன்பம் பயப்பது; குரு மறுபிறவியைத்தடுத்து நிலைபேரின்பம் பெறச்செய்பவர்; குருவே எனது அடைக்கலமான, ராமனெனும் செல்வத்திற்கிருப்பிடம். 7

குருவின் பண்ணிசையில்/அன்பில் சிறந்த நல்லரசனுன ஶ்ரீராமன் ஒளிர்பவர்; குரு ராமனை நன்கு பூஜித்துப் பாடுதலில் மிகச் சிறந்தவர்; குரு பக்தியுடன் ஸமர்ப்பிக்கப்பட்ட இம்மலர்கள் கொண்ட திருவடிகளுடையவர்; குருவே எனது அடைக்கலமான, மங்களத்திற்கிருப்பிடம். 8

ஓம்

மங்களம்

ஸ்ரீராமஜயம்

ஸத்குரு ஸ்ரீத்யாகப்ரம்ம மங்களாஷ்டகம்

ஸங்கீதத்தின் உயிரும் வித்துமானவருக்கு; ஸப்தஸ்வரங்களில் உறைபவருக்கு; ஷட்ஜத்தை ஆதாரமாகக்கொண்ட ஶ்ருதியில் இருப்பவருக்கு; ஸத்குருவுக்கு மங்களம். 1

மலைமேல் வீற்றிருந்த ராமனை / ரிஷபாரூடனை ஶிவனைப் பாடியவருக்கு; பகைவரை அழிக்கும் ஸ்ரீராமன் மேல் பாடியவருக்கு; ரிஷிஶ்ரேஷ்டருக்கு; நற்பாட்டுகள் பாடியவருக்கு / நன்கு பாடப்பட்டவருக்கு; பாட்டெனும் செல்வத்தை அருளியவருக்கு மங்களம். 2

கங்கையின் புனிதமாய்ப் பாடியவருக்கு; ஆழ்ந்த இனிய குரலில் மொழிபவருக்கு; காந்தர்வ கானமாம் இனிய இசையில் மகிழ்பவருக்கு / இசையில் காந்தர்வரானவருக்கு; பாட்டில் மகிழ்பவருக்கு; ஆய்ந்தறியமுடியாதவருக்கு மங்களம். 3

குருநாதருக்கு மங்களம்; மங்களம், இன்பம், சிறப்பு இவை கொண்டவருக்கு / இவற்றை அளிப்பவருக்கு; மங்களமான ஸ்வரங்களின் ஸாரமானவருக்கு/ மங்கள அமுதக்குரல் படைத்தவருக்கு; மங்களம் தானே ஆனவருக்கு மங்களம். 4

மிக்க இனிய குரலில் பாடியவருக்கு/பாடப்படவேண்டியவருக்கு; நிறைந்த ஸ்வரக்கடலானவருக்கு; கடல் வண்ணத்தில் நடம் புரிபவருக்கு / கடலில் பண்ணிசை நடம் புரிபவருக்கு; மேலான பரம்பொருளானவருக்கு / மேலானபொருளளிப்பவருக்கு மங்களம். 5

மங்களமருள்பவருக்கு; நற்பேறுள்ளவரால் ஸேவிக்கப்படுபவருக்கு; திறமையும் தைர்யமும் அளிப்பவருக்கு; த்யானிக்கப்பட்டவருக்கு; த்யானத்தால் அடையப்பட வேண்டியவருக்கு; த்யானிக்கப்பட்ட உருவானவருக்கு மங்களம். 6

நிஷாத ஸ்வரத்தின் இனிமையானவருக்கு/இனிமைகொண்டவருக்கு; இரவும் பகலும் நினைக்கப்பட்டவருக்கு; வீட்டுப்பேறளிப்பவருக்கு; நிலைத்த இன்பத்தை அருள்பவருக்கு மங்களம். 7

ஸப்தஸ்வரங்களின் அதிஷ்டான் தேவதையானவருக்கு; தன்னால் இனிது பாடப்பட்ட க்ருதிகளில் இருப்பவருக்கு; ஸத்குரு த்யாகராஜருக்கு; புஷ்பாவினால்/புஷ்பங்களால் அர்ச்சிக்கப்பட்டவருக்கு மங்களம். 8

ஓம்

மங்களம்